
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 21 புதன்கிழமை (07.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 343

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/934)



ஆசிரியர் வரவில் வீழ்ச்சி

04




மீண்டும் பேச்சு

08



ஊழலை ஒழிக்க ஊடகம்

05




மோசடி அம்பலம்....

14

# நாவாந்துறையில் நடந்த துயரம் செயலக கூட்டத்தில் கண்ணீர் கதை

## அனைவரையும் விடுதலை செய்ய இடித்துரைப்பு





(யாழ்ப்பாணம்)

படையினரின் தாக்குதலில் பாதிக்கப்பட்ட நாவாந்துறை மக்கள் மீதான வழக்கை விலக்கிக்கொண்டு அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்ற உயர்மட்ட மகாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

மர்ம மனிதன் பீதி காரணமாக யாழ். குடாவில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையைத் தணிக்கும் முகமாக யாழ். செயலகத்தில் நேற்று உயர்மட்ட மகாநாடு ஒன்று நடைபெற்றது.

நாவாந்துறைப் பகுதியிலிருந்து மேற்படி கூட்டத்துக்கு சமுகம்தந்த பொதுமக்கள் பிரதிநிதி பாலச்சந்திரன் என்பவரே மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

கடந்த 22 ஆம் திகதி நாவாந்துறையில் இடம்பெற்ற பொதுமக்கள் மீதான படையினரின் தாக்குதல் சம்பவம் குறித்து மேற்படி பிரதிநிதி உணர்ச்சிவசப்பட்டவராக பொதுமக்கள் மீதான தாக்குதல் சம்பவத்தை கண (15 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமான அம்புலன்ஸ் சேவை

(வவுனியா)

நோயாளர்கள் மற்றும் மரணமடைந்தவர்களின் சடலங்களை வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவர அல்லது எடுத்துச் செல்ல குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு அம்புலன்ஸ் வண்டிகள் அமர்த்தமுடியும் என இலங்கை செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளையினர் தெரிவித்துள்ளனர்.

சங்கத்திற்கு வருமானம் தரக்கூடிய வகையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள சங்க நிர்வாகத்தினர் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு இலவச சேவையையும் நடத்திவருகின்றோம் எனவும் குறிப்பிட்டனர். (39)

## மீனவர்களுக்கு அறிவுறுத்தல்

(வேலணை)

யாழ். தீவக கடல் பகுதியில் கடும் காற்று வீசுவதுடன், கடல் கொந்தளித்த வண்ணம் உள்ளது. இதனால் மீனவர்கள் எவரையும் கடலுக்குச் செல்லவேண்டாம் என்று அறிவுறுத்தல் செய்யப்பட்டிருக்கிறது.

## நாவாந்துறைச் சம்பவம்

# மிகுதி ஒன்பது பேரும் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சம்பவத்தில் பாதிக்கப்பட்டு நீதிமன்றத்தால் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மிகுதி 9 பேரும் நேற்று யாழ். மாவட்ட நீதவானினால் 5 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செயயப்பட்டுள்ளனர்.

மேற்படி வழக்கினை நேற்று விசாரணை செய்த யாழ். மாவட்ட நீதவான் பிரேம்சங்கர் எதிர்வரும் (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஆளுநர் தலைமையில் குழு நடவடிக்கையில் குதிக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டைப் பீடித்துள்ள மர்மமனிதன் பீதியைப் போக்குமுகமாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், பாதுகாப்புத் தரப்பினர் ஆகியோரை உள்ளடக்கிய 20 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று அமைக்கப்படவுள்ளதாக பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இக்குழுவைத் தவிர பிரதேச ரீதியாக பிரதேச செயலர் தலைமையின் கீழும் பாதிக்கப்பட்டிருந்த கிராமங்களிலும் சிவில் சமூகத்தினரை உள்ளடக்கிய குழுக்களும் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிழமைக்கு ஒரு தடவை இக்குழுவினர் கூடி தமது நடவடிக்கைகள் குறித்து ஆராயும் அதேவேளை, தமது முதலாவது கூட்டத்தை சில தினங்களில் நடத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## பீதி இனித் தணியும்



நேற்று முற்பகல் 9.30 மணியளவில் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற யாழ். குடாநாட்டைப் பீடித்துள்ள மர்ம மனிதன் பீதியினைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பொதுமக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இத்தகவலைத் தெரிவித்தார். (15 ஆம் பக்கம் பார்க்க)


## ஜனாதிபதியுடன் நாளை பேச்சு

(கொழும்பு)

யாழ்.குடாவில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையத் தணிக்கும் மற்றுமொரு நடவடிக்கையாக யாழ். வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் நாளை மாலை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இக்குழுவில் புத்திஜீவிககள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமயப் பெரியார்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

# இரகசிய வலையமைப்பு பலமடையும் இராணுவம்



(கொழும்பு)

இராணுவத்தின் அனைத்து வகையான நடவடிக்கைப் பணியகங்களையும் ஒருங்கிணைத்து பிரத்தியேகமான வலையமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டிருக்கும் இவ்வலையமைப்பு மிக இரகசியமாகவும் பாதுகாப்பானதாகவும் பேணப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தின் பல்வேறு பணியகங்கள், படைப்பிரிவு தலைமையகங்களுக்கிடையிலான (15 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி!

### ஏழாலையில் விபரீதம்


(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கில் நேற்றுமுன்தினம் இரவு மின்சாரம் தாக்கி இரு பிள்ளைகளின் தந்தை பலியாகியுள்ளார். குளித்துக் கொண்டிருந்த இவர் மின் பம்பியின் ஆணியை அழுத்திய போதே மின்சாரத்தால் தாக்குண்டு மரணமடைந்ததாகத் தெரியவருகிறது.

ஏழாலை தெற்கு, ஏழாலையைச் சேர்ந்த அ.அமலநாதன் (வயது - 38) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக இறந்தவராவார்.

# தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்பட மாட்டாது

## காணி அபிவிருத்தி அமைச்சர் உறுதி



தமிழ் மக்களின் காணிகள் அவர்களுக்கே உரிய. அவை எச்சந்தர்ப்பத்திலும் வேறு எத்தேவைக்குமோ வேறு எத்தரப்பினருகோ பயன்படுத்தவோ வழங்கப்படவோ மாட்டாது என காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை கிளிநொச்சி அரச செயலகத்தில் கடந்த காலத்தில் காணி உரிம பத்திரத்தை தொலைத்தவர்களுக்கான காணி உரிமப் பத்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில தரப்பினரது பொய்ப் பிரச்சாரங்களை மக்கள் நம்பவோ அச்சமடையவோ தேவையில்லை. மக்களுடைய காணிகள் பறிக்கவோ வேறு தரப்பினருக்கு பகிர்ந்தளிக்கவோ படமாட்டாது அவை மக்களுக்குரியதுதான் அதற்கான காணி உரிமங்களை வழங்குவதற்குரிய நடிவடிக்கைகளை எடுத்துள்ளோம். விரைவில் இப்பகுதிகளில் காணி அனுமதிபத்திரம் அற்ற அனைவருக்கும் காணி அனுமதி பத்திரம் வழங்கப்படும். அதன் முதற்கட்டமாக இன்று கடந்த காலத்தில் காணி உரிமை பத்திரம் வழங்கப்பட்டுத் தொலைத்த எண்பது பேருக்கு வழங்கப்படுகிறது இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறும். மேலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் இப்பகுதி மக்களின் காணிப்பிரச்சினைகளை எமது கவனத்திற்கு கொண்டு வந்ததனைத் தொடர்ந்து வடக்கு, கிழக்குக்கென விசேட சட்ட ஏற்பாடுகள் மூலம் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். எதிர்வரும் காலங்களிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோரால் இப்பகுதி மக்களின் காணிப்பிரச்சினைகள் தொடர்பாக முன்வைக்கும் கோரிக்கைகளை ஏற்று தீர்வுகாணத் தயாராக உள்னோம் எனவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான மு.சந்திரகுமார் இம் மாவட்டதில் காணிகள் அற்றோருக்கு விரைவில் காணிகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்தோடு தனியாருக்குச் சொந்தமான காணிகளில் மிக நீண்டகாலமாக குடியிருப்போருக்கும் காணிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. காணி அமைச்சரின் கவனத்திற்கும் இவ்விடயம் எம்மால் கொண்டு செல்லப்பட்டுள்ளன. அவரும் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மிகுந்த அக்கறையோடு உள்ளார். எனத் தெரிவித்தார்.(29)

## அளவெட்டியில் ஏகாதசி பூசை

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை வியாழக்கிழமை ஏகாதசி விரதபூசை மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் தொடங்கும். 9.00 மணிக்குச் சிறப்புச் சமயச் சொற்பொழிவு நடைபெறும். முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து ஸ்ரீநாகவரத நாராயணர் வீதியுலா எழுநதருளல் இடம்பெறும். நண்பகல் 12.00 மணிக்கு அடியார்களுக்கான மகேஸ்வர பூசை இடம்பெறும். (68)

## மணிக்கூட்டு வீதி புனரமைக்கப்படுமா

யாழ். மணிக்கூட்டுக் கோபுரச் சுற்றுவட்ட வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவிற்கு மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளது. வடிகால், பாலவேலைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து மணிக்கூட்டு வீதி, வேம்படி வீதிகள் ஊடான போக்குவரவுகள் ஆரம்பித்துள்ளது.

அதேவேளை சுற்றுவட்டத்தைச் சுற்றும் நான்கு பக்கங்களிலும் அமைந்துள்ள வீதிகளில் குண்டும் குழிகளும் தோன்றிப் போக்குவரவுக்கு இடையூறாக இருப்பதும் சுட்டிக்காட்டப்படத்தக்கது. (68)

## காரைநகர் பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் நாளை வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு யா/ கலாநிதி ஆதியாகராசா மத்திய மகாவித்தியாலய நடராசா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ தேவானந்தா மற்றும் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பல்துறை சார்ந்த அதிகாரிகளும் கலந்துகொள்வர்.(50)

## விவசாயக் கண்காட்சியில் வினாடிவினாப் போட்டிகள்

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய வளாகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விவசாயக் கண்காட்சியில் இரண்டாம் நாளான நேற்றைய தினம் பாடசாலை மாணவர்களுக்கான வினாடி வினாப் போட்டிகள் மூன்று சுற்றுக்களாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. நடைபெற்று முடிவடைந்த மூன்று சுற்றுக்களிலும் வெற்றி பெற்ற பாடசாலைகளினதும் மற்றும் பெற்ற புள்ளிகளினதும் விபரம் வருமாறு -

| போட்டி இல | பங்குபற்றிய பாடசாலையின் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 01 | சாவகச்சேரி பெண்கள் கல்லூரி | 45 |
| | யா / நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை | 25 |
| | | |
| 02 | முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலயம் | 35 |
| | முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயம் வவுனிக்குளம் | 30 |
| | | |
| 03 | மாங்குளம் மகா வித்தியாலயம் | 45 |
| | முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயம் | 30 |

பாடசாலை மாணவர்களுக்கான இந்த வினாடிவினாப் போட்டிகள் இறுதிநாளான 10.09.2011 ஆம் திகதி வரை நடைபெற இருபதனால் கண்காட்சியினைப் பார்வையிடும் பாடசாலை மாணவர்கள் வினாடிவினாப் போட்டிகளிலும் பங்குபற்றுவதற்கு அன்புடன் அழைக்கப்படுகின்றனர் என்று யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

## நுணாவில் பிள்ளையார் இரதோற்சவ விழா

நுணாவில் மேற்கு மணங்குனாய் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ்வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கு சப்பரத் திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்குத் தேர்த்திருவிழாவும் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (11)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.07.2010 வரை அடகு வைத்து, இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01 | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையும், மானிப்பாய் சேவை நிலையமும், நாவலர் வீதி சேவை நிலையமும் | 25.09.2011 முற்பகல் 8.30 | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 02 | காங்கேசன்துறைக்கிளையும், மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03 | யாழ். பிரதான வீதிக்கிளையும், உரும்பிராய் சேவை நிலையமும் | | |
| 04 | ஊர்காவற்துறை | | |
| 05 | நெல்லியடி | | |
| 06 | அச்சுவேலி | | |
| 07 | சங்கானைக்கிளையும், பண்டத்தரிப்பு சேவை நிலையமும் | | |
| 08 | சுன்னாகக்கிளையும், கோப்பாய் சேவை நிலையமும் | | |
| 09 | சாவகச்சேரிக்கிளையும், கொடிகாமம் சேவை நிலையமும் | | |
| 10 | வல்வெட்டித்துறை | | |
| 11 | யாழ்.பல்கலைக்கழக் கிளையும், திருநெல்வேலி சேவை நிலையமும், கல்வியங்காடு சேவை நிலையமும் | | |
| 12 | யாழ். கன்னாதிட்டிக்கிளையும், இணுவில் சேவை நிலையமும் | | |
| 13 | பருத்தித்துறைக்கிளையும், புலோலி சேவை நிலையமும் | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேச காரியாலம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்,
07.09.2011.

(C/923)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பட்டப் படிப்பு பதிவு - 2010 / 2011

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 2010/2011 கல்வியாண்டுக்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வுநாடியாகப் பதிவுசெய்ய விருப்புடைய, தகைமை பெற்றவர்களிடமிருந்து 04.11.2011 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. வணிகமுதற் தேர்வு
02. கலைமுதற் தேர்வு
03. பொது / சிறப்பு கலைமாணி பகுதி - I / வணிக இரண்டாம் தேர்வு
04. இசைமாணி / நடனமாணி முதலாம் வருடம்
05. இசைமாணி / நடனமாணி இரண்டாம் வருடம்
06. இசைமாணி / நடனமாணி மூன்றாம், நான்காம் வருடம்

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி - I கற்கை நெறிக்குப் பதிவுசெய்து கொள்ளலாம். இந்துநாகரீகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரீகம், மெய்யியல், அரசறிவியல்.

| கட்டண விபரம் | ரூபா |
|---|---|
| விண்ணப்பப் படிவம் | 100.00 |
| பதிவுக் கட்டணம் | 1000.00 |
| பாடத்திட்டமும் விதிமுறைகளும் | |
| கலைமுதற் தேர்வு | 250.00 |
| வணிகமாணி (4 வருடங்கள்) | 650.00 |

விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து எமது அலுவலக நேரத்தில் பெற்றுக கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, உரிய தொகைக்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையை, சுயமுகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், "உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்", யாழ்ப்பாணம. என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவு - 2010 / 2011" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0212223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்,
06.09.2011.

(C/924)

வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஏதோ ஓரிடத்தில் அளவற்ற நேர்மையும், அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். --விவேகானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## எங்கிருந்து தொடங்குவது?

இலங்கையை சிங்கப்பூராக மாற்றும் கனவை ஜே.ஆர். ஜெயவர்த்தன 1970களில் பிரபலமாக்கினார். பதவிக்கு வந்த பிறகு அவருக்கு, 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்ற வீம்பு முக்கியமாகி சாண் ஏற நினைத்து முழம் சறுக்கிக் கொண்ட அவலகதி நேர்ந்தது. நாட்டின் பொருளாதாரத்தை யுத்தக் கறையான் அரிப்பதற்கான ஆரம்ப வசதிகளைச் செய்துகொடுத்தவராக அவர் அமைந்தார்.

யுத்தத்தை முடித்து வைத்த இன்றைய அரசும், 'இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக ஆக்குவோம்' என்று சொல்லும்போது, பழையபடி சிங்கப்பூர்க் கனவே மனதுக்குள் இருப்பதை உணர முடிகிறது. இந்தியாவில் அண்ணா ஹசாரேயின் ஊழலுக்கெதிரான போராட்டத்தின் போதும், ஊழலை ஒழித்துவிட்டால் நாட்டை முன்னேற்றி விடலாம் என்னும்போது சிங்கப்பூர் உதாரணமே அங்கும் சொல்லப்பட்டது.

சிங்கப்பூர் பலருக்கும் ஒரு இலட்சிய சமூகமாக இன்று தோன்றுவதற்குக் காரணங்கள் உண்டு. ஊழலைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக அங்கு மக்கள் வாழ்வில் பெரும் வளம் ஏற்பட்டிருக்கிறது என்பது கண்கூடான செய்தியாக இருக்கிறது. அண்ணா 'ஹசாரேயின் போராட்டத்தின் போது இப்படி ஒரு குறுஞ்செய்தி சுற்றுக்கு விடப்பட்டது.

'1982ஆம் ஆண்டு சிங்கப்பூரில் லோக்பால் மசோதா சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒரே நாளில் 142 ஊழல் மந்திரிகளும் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர். இன்று சிங்கப்பூரில் நூற்றில் ஒருவரே ஏழை. அரசுக்கு யாரும் வரி செலுத்துவதில்லை. அங்கு 92 வீத கல்வியறிவு நிலவுகிறது. சிறப்பான மருத்துவ வசதிகளும் மிகக் குறைந்த விலைவாசியும் உள்ள சிங்கப்பூரில் கறுப்புப் பணத்தின் அளவு பத்து சதவிகிதம் மட்டுமே. அங்கு நூற்றில் ஒருவரே வேலையில்லாமல் இருக்கிறார்.'

சிங்கப்பூர் அரசு ஊழலுக்கு எதிரான அமைப்பை நடைமுறைப்படுத்துவதில் எப்படி வெற்றி பெற்றது என்பதே கவனிக்க வேண்டியதாகிறது. சுதந்திரத்துக்கு முந்தைய, பிரிட்டிஷ் காலனியாக இருந்த சிங்கப்பூரில் ஊழல் மலிந்து இருந்ததற்குக் காரணிகளாக இருந்தவை குறைந்த ஊதியம், ஊழலுக்கு தகுந்த தண்டனையின்மை என்றார் நவீன சிங்கப்பூரின் சிற்பியாகச் சொல்லப்படும் லீ க்வான் யூ.

1959ல் சிங்கப்பூர் இங்கிலாந்திடம் இருந்து சுதந்திரம் பெற்றது. ஒரு தூய நிர்வாகத்தை அளிப்போம் என்று உறுதியளிக்கும் வகையில், பதவிப் பிரமாணத்தின்போது ஆளும் பிஏபி கட்சியின் உறுப்பினர்கள் முழுக்க முழுக்க வெண்ணிற ஆடைகள் அணிந்து வந்தனர். "அரசுக்கு கிடைத்த ஒவ்வொரு டொலர் வருமானமும் ஒழுங்காக அரசுக் கணக்கில் சேர்க்கப்பட்டு, வழியில் மடைமாற்றப்படாது கடைநிலைக் குடிமகனுக்கு அதன் முழுப் பலனும் கிடைப்பதை நாங்கள் ஒவ்வொரு நாளும் உறுதி செய்தோம்," என்கிறார் லீ க்வான் யூ.

மிகச் சிறிய நாடான சிங்கப்பூர் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டுமெனில் அதற்கு அந்நிய முதலீடு அவசியம் என்பதை அரசியல் தலைமையில் இருந்தவர்கள் உணர்ந்தனர். இயற்கை வளங்களோ, பெரும் நிலப்பரப்போ, மக்கள் கூட்டமோ இல்லாத நாடான சிங்கப்பூரை உலக முதலீட்டாளர் கவனத்தில் முன்னிலைப்படுத்த, ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளில் உறுதியும், வளர்ச்சிக்கு ஆதரவான பொருளாதாரச் சூழலும் இருப்பது அவசியம் என்றும் தெரிந்து கொண்டனர். அதனால், சுதந்திரம் பெற்ற நாள் முதலே, பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் ஊழலுக்கு எதிரான நிர்வாகச் சீர்திருத்தங்களில் உறுதியான கவனம் செலுத்தியது சிங்கப்பூர் அரசு. இன்று உலகில் அதிக அளவு அந்நிய முதலீட்டைப் பெறும் முதல் இருபது நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூர் தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.

நேர்மையான நிர்வாகம் உள்ள நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூர் ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. லஞ்சம் கேட்பதோ, வாங்குவதோ கூடாது. லஞ்சமாகப் பணம் வாங்கியது உறுதி செய்யப்படாதபோதும், ஊழல் செய்யும் எண்ணத்துடன் செயல்பட்டதாக நிருபிக்கப்பட்டால் போதும், சிறைத் தண்டனை அளிக்கப்படும்.

ஆசியாவில் ஊழல் ஒழிப்பில் முன்னிலையில் நிற்கும் சிங்கப்பூர், ஏனைய தேசங்களுக்கு சில பாடங்களை உணர்த்துகின்றது. ஊழலுக்கு எதிரான சட்டம் இருந்தாலும், ஊழலைக் களையத் தேவையான ஆள் பலம் மற்றும் அமைப்பு இருந்தாலும், அந்த அமைப்பு சட்டங்களை நடைமுறைப்படுத்தத் தயாராக இருந்தாலும், உறுதியான அரசியல் தலைமை இல்லாத இடங்களில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் வெற்றி பெறுவதில்லை என்பதே அது.

– ஆசிரியர்.

# தரம் குறைந்த பெற்றோல் கொள்வனவு சட்ட நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## கேட்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

தரம் குறைந்த பெற்றோலை கொள்வனவு செய்ததில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டிருக்கின்றபோதும் அதற்கு உடந்தையானவர்களுக்கு எதிராக இதுவரையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டும் ஐ.தே.கவின் ஊடகப் பேச்சாளரும் எம்.பி.யுமான கயந்த கருணாதிலக இந்தப் பெற்றோலைப் பாவித்து பழுதடைந்த வாகனங்களுக்கு நிபந்தனையின்றி நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் நாட்டில் இன்று கீறீஸ் பூதங்கள் தலைவிரித்தாடுகின்றன.

இதற்குப் பின்னால் மறைந்து கொண்டு அரசாங்கம் ஊழல் மோசடிகள் வீண்விரயங்களை மேற்கொள்கின்றது. பாடசாலை மாணவர்களுக்கு சரியான நேரத்தில் சீருடைகள் வழங்கப்படுவதில்லை.

சிமெந்து,பெற்றோல், மருந்து வகைகள் உட்பட மக்களுக்கு தேவையான பொருட்கள் இறக்குமதியில் தரம் கவனிக்கப்படுவதில்லை.

தரம் குறைந்த பொருட்களே அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. பெற்றோல் தட்டுப்பாட்டை வேண்டுமென்றே ஏற்படுத்தி 15,000 மெற்றிக் தொன் பெற்றோலை கொள்வனவு செய்து அதனை பாவனையாளர்களுக்கு விநியோகித்துள்ளனர்.

இதனால் பெரும்பாலான வாகனங்கள் பழுதடைந்துள்ளதோடு 450க்கும் மேற்பட்ட எரிபொருள் நிரப்பு நிறுவனங்களின் பம்பிகள் சேதமடைந்துள்ளன. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 41கோடி ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதான எதிர்கட்சியான நாம் உட்பட பல கட்சிகள் கருத்துக்கள் வெளியிட்டோம். ஆனால் எமது விமர்சனங்களை குற்றச் சாட்டுக்களை அரசாங்கம் கண்டு கொள்ள வில்லை.

அவற்றை பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நிராகரித்தார். இறுதியில் இப்பிரச்சினை தொடர்பாக ஆராய மூவரடங்கிய ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

அண்மையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகம் தெமட்டகொடையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ஊழியர்களுக்கு நன்மை பயக்கும் செய்தியை வெளியிடவில்லை மாறாக தண் ணீர் கலந்த பெற்றோலைக் கொள்வனவு செய்ய வேண்டாம் என்றே தெரிவித்துள்ளார்.

இதன் பின்னணியில் உள்ளோரை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் இல்லாவிட்டால் பின்னணியில் அரசியல் தலையீடு உள்ளது என்ற சந்தேகமே எழும் என்றார்.

# கொழும்புத்துறைமுகத்தை அம்பாந்தோட்டைக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சி



(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தை அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்வதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலை முன்னிட்டு நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

கொழும்பு நகரை அரசாங்கம் அழித்து வருவதுடன், அம்பாந்தோட்டையை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கின்றது.

கொழும்புத் துறைமுகம் வருடாந்தம் 5500 மில்லியன் கொள்கலன்களை கையாள்வதாகவும், அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கடந்த எட்டு மாதங்களில் நான்கு கப்பல்கள் மட்டுமே சென்றுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கண்டி, அம்பாந்தோட்டை போன்ற பிற மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு கொழும்பில் தொழில் வாய்ப்பு அளிக்கப்படுகின்ற போதிலும், கொழும்பு வாழ் இளைஞர், யுவதிகள் ஒதுக்கப்படுகின்றனர்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியை பலவீனப்படுத்துவதன் மூலம் தேர்தலில் வெற்றியீட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றது எனவும் மேலும் தெரிவித்தார்.

# கலாசார விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(முழங்காவில்)

பூநகரி கலாசார பேரவையால் நடத்தப்படுகின்ற கலாசார விழாவும் புகுந்துணர் சஞ்சிகை வெளியீட்டுவிழாவும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் முழங்காவில் மகாவித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பூநகரி உதவி அரசாங்க அதிபரும் கலாசார பேரவையின் தலைவருமான எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பொது நிர்வாகப் பிரதி பிரதம செயலாளர் . தி. இராஜநாயகம், வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீதேவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

காலை நடைபெறும் நிகழ்வுகள் பேராசிரியர் கா.சிவதம்பி அரங்கிலும் மாலை நிகழ்வுகள் முன்னாள் அரசாங்க அதிபர் க.பொன்னம்பலம் அரங்கிலும் இடம்பெறும்.

இந் நிகழ்வுகளில் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (112)

# ஜீவனோபாய உதவித்திட்டங்கள் இன்று ஆரம்பித்து வைப்பு

(வவுனியா)

போருக்குப் பின்னரான அவசர ஜீவனோபாய உதவித்திட்டம் இன்று வவுனியாவில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது. நகரசபை கலாசார மண்டபத்தில் காலை இடம்பெறும் நிகழ்வில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தத் திட்டத்தினை வைபவரீதியாக அங்குராப்பணம் செய்துவைப்பார் என மாவட்ட செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அந்த வகையில் ஜப்பான் நாட்டுத் தூதுவர், நோர்வே அரசின் பிரதிநிதி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி, மற்றும் முக்கிய திணைக்களத் தலைவர்கள் இந்த ஆரம்பவைபவத்தில் கலந்துகொள்வார்கள் என வவுனியா செயலகத் திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஐரோப்பிய ஒன்றியத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு கட்டப்பட்ட 109 வீடுகளை செட்டிகுளம் மெனிக்பாம் கிராமத்தில் பயனாளிகளிடம் கையளிக்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். அத்துடன் போரின் காரணமாக சேதமடைந்த செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலையும், பப்பட தொழிலகமும் அமைச்சரினால் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு செல்வபுரத்தில் கட்டப்பட்ட 54 வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்விலும் தொழில் உபகரணங்களை இழந்தவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படும் நிகழ்விலும் அமைச்சர் பங்குகொள்வார் என அதிகாரிகள் தெரிவித்தனர். (39)

# வன்னியில் கற்பித்தலில் ஈடுபடும் யாழ். ஆசிரியர்கள் வரவில் வீழ்ச்சி

## மர்ம மனிதனே காரணமாம்

(கிளிநொச்சி)

மர்ம மனிதன் அச்சுறுத்தலை அடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பகுதிக்குச் சென்று கற்பித்தலை மேற் கொளளும் ஆசிரியர்களின் வரவு பெருமளவில் குறைவடைந்து காணப்படுவதனால் மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாடு உட்பட பல்வேறு பகுதிகளிலும் தற்போது மர்ம மனிதன் குறித்த பீதி அதிகரித்துச் செல்வதனால் அனைவரும் அச்சமடைந்த நிலையில் உள்ளனர். இந்நிலையில் மூன்றாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. எனினும் வன்னிப் பகுதிகளில் கடமையாற்றும் யாழ். மாவட்ட ஆசிரியர்களின் வரவில் பெருமளவில் வீழ்ச்சி காணப்பட்டது. இதற்குக் காரணம் கேட்டபோது மர்ம மனிதனின் அச்சமென விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக வருகை தந்தவர்களும், பாடசாலை நேரம் முடிவடைவதற்கு முன்னர் ஊருக்குத் திரும்புவதற்கு தமது அவசரத்தைக் காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் இருப்பிட வசதி ஏற்படுத்திக் கொடுத்த நிலையில் முன்னர் அங்கு தங்கி நின்று கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்ட ஆசிரியர்களும் தற்போது தங்கி நிற்பதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புக்களை நடாத்துவதிலும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகிறது.

ஏற்கனவே, வன்னிப் பகுதிப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ள நிலையில், யாழ். மாவட்ட ஆசிரியர்களும், மர்ம மனிதன் பீதியைக் காட்டி, கற்பித்தல் செயற்பாட்டிற்கு செல்வதற்குத் தயக்கம் காட்டுவது அப்பகுதி மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை மேலும் பாதிப்படையவே செய்யுமென கல்வி அதிகாரிகள், பெற்றோர் உட்பட பல்வேறு தரப்பினரும் தமது கவலையைத் தெரிவித்தனர். (12)

## நாளைய தினம் இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வருடாந்த இரதோற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை வசந்தமண்டபப் பூசைகள் இடம்பெற்று துர்க்கையம்மாள் தேரில் ஆரோகணிக்கும் காட்சியும் இடம் பெறவுள்ளதுடன் மறுநாள் காலை 9.00 மணிக்கு தீர்த்தோறசவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும்.

இவ்வுற்றசவத்திற்கு செல்லும் அடியார்களின் நன்மை கருதி அரச மற்றும் தனியார் பேருந்து விசேட சேவைகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 25 வருடங்களாகத் திருத்தப்படாத கரணவாய் இராஜலிங்கம் வீதி

### பயணம் செய்வதில் மக்கள் சிரமம்

(கரணவாய்)

கரணவாய் ஜே/352 இராஜலிங்கம் வீதி குன்றும் குழியுமாக மிகமோசமாகச் சேதமடைந்துள்ளதால் தாம் இவ்வீதியூடான போக்குவரத்தை பெரும் சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ள வேண்டியிருப்பதாக இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராம அலுவலர் பிரிவில் 75 குடும்பங்கள் குடியிருப்பு வீடுகளில் வாழ்ந்து வரும் நிலையில் தாம் இவ்வீதியால் செல்வது மிகவும் கஷ்டமாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

சுமார் 25 வருட காலமாக புனரமைப்பு செய்யப்படாது சேதமடைந்துள்ள இவ்வீதியால் பாடசாலை மாணவர்கள், தொழில ஸ்தாபனங்களுக்குச் செல்லும் உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் எனப் பலர் பயணம் செய்கின்றனர்.

இவ்வீதிப் புனரமைப்புத் தொடர்பாகத் தாம் பல தரப்பினரிடம் தெரிவித்தும் இதுவரை அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் மழை காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் இவ் வீதியைப் புனரமைப்பதற்கு சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கிராம மக்கள். கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## போதியளவு நீர்விநியோகம் இன்றி 40 வீத சிறுபோக செய்கை பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்து நீரினைப் பயன்படுத்தி சிறுபோகப் பயிர்ச் செய்கையினை மேற்கொண்ட விவசாயிகள் செய்கைக்கான நீர் விநியோகம் போதியளவில் இல்லாமையால் பயிர்ச் செய்கை அழிவடைந்துள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் பத்து ஏக்கரில் செய்கையை மேற் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் ஏழு ஏக்கர் கூடுதலாக 17 ஏக்கரில் செய்கை மேற்கொள்ளப்பட்டதாக விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகிறது.

முரசுமோட்டை, ஊரியான் ஆகிய பிரதேசங்களில் கூடுதலான வயல் நிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் இப்பிரதேச விவசாயிகள், தாம் வங்கிகளில் கடனைப் பெற்று இவ்வயல் நிலங்களைப் பண்படுத்தி சிறுபோக செய்கையை மேற்கொண்டதாக தெரிவிக்கின்றனர்.

தற்போது இவ்வயல் நிலங்களுக்குச் சீரான நீர் விநியோகம் இல்லாமல் 40 வீதமான செய்கை அழிவடைந்துள்ளதாகவும் இதனால் வங்கிகளினூடாகப் பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த நஷ்டத்தினால் காலபோகச் செயகையையும் மேற்கொள்ள முடியாது தாம் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக இப்பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (கே)

## சுற்றுச்சூழலை பேணுவதற்காக நெல்லியடியில் மரங்கள் நாட்டல்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் நெல்லிடியப் பகுதியில் "சுற்றுச்சூழல் பேணுவோம்" எனும் தொனிப் பொருளில் சிறிலங்கா இன்சூரன்ஸ், எயாரெல், சம்பத் வங்கி ஆகிய நிறுவனங்களினால் வீதி ஓரங்களில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டு அவை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இம்மரக்கன்றுகள் வீதிக்கருகில் நாட்டப்பட்டுள்ள அதேவேளை, கால்நடைகளால் சேதப்படுத்தப் படுவதைத் தடுக்கும் வகையில் அவற்றைப் பாதுகாப்பதற்காக கம்பி வலையால் ஆக்கப்பட்டு பாதுகாப்புக் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து அந் நிறுவனங்களால் இவை பராமரிக்கப்பட்டும் வருகின்றன.

இந் நிறுவனங்களின் இப் பொதுநலப் பணிகளைப் பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டி வருவதுடன் இத்திட்டத்திற்கு தமது பங்களிப்பை வழங்குவதற்கும் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (03)

## சட்டவிரோத மண் அகழ்வு 50 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி - மண்ணித்தலையில் கொழும்புத்துறையைச் சேர்ந்த அகிலன் மற்றும் அதே ஊரைச்சேர்ந்த இன்னுமொரு நபருமாகச் சேர்ந்து மண்ணித்தலையில் மண் அகழும்போது அப்பகுதி இராணுவத்தினரால் கடந்த 30ஆம் திகதி கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களைக் கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்ப்படுத்தினர். வழக்கினை விசாரித்த நீதிவான, இவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு உத்தர விட்டு விடுதலை செய்தார்.

கடந்த காலங்களில் மண்ணித்தலையில் திருட்டுத்தனமாக மண் அகழும் செயற்பாடுகள் நடைபெற்று வந்தன. இருப்பினும், இராணுவத்தினரின் இந்த நடவடிக்கை காரணமாக மண் அகழும் செயற்பாடுகள் தற்போது சற்றுக் குறைந்துள்ளதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. (21)

## ஆலய புனரமைப்பு வேலைகளை அமைச்சர் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்தச் சூழலால் முழுமையாகச் சேதமடைந்த குருநகர் கடற்கரையில் அமைந்துள்ள அன்னை வேளாங்கன்னி ஆலய புனரமைப்பு வேலைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிட்டார்.

கடந்த கால யுத்தத்தினால் குருநகர் கடற்கரையில் அமையப் பெற்றிருந்த அன்னை வேளாங்கன்னி ஆலயமும் முழுமையாகச் சேதமடைந்திருந்தது. இந்நிலையில் மக்களின் பங்களிப்புடன் அவ்வாலயம் மீள் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் நேற்று முன்தினம் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு அவ் ஆலயத்தைப் பார்வையிட்டார். அத்துடன் அங்கு கூடியிருந்த மக்களுடனும் கலந்துரையாடினார். குறிப்பாக, கிறீஸ் மனிதன் தொடர்பாகவும் அதன் உண்மைத் தன்மை தொடர்பாகவும் அமைச்சர் அந்த மக்களிடம் விளக்கினார். இதன்போது அமைச்சருடன், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மாநகர சபை உறுப்பினர் ஆகியோர் உடனிருந்தனர்.





யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் விவசாயக் கண்காட்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வின்போது விருந்தினர்களுக்கு விவசாயத் திணைக்களத்தின் காணிச் செயலாளர் யு.எல்.எம். ஹால்தீன் பயிர்கள் தொடர்பான விளக்கம் அளிப்பதையும், வவுனியா மாவட்ட நிருத்திநுசேதனா பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனத்தையும் காணலாம். (படங்கள் : சுமித்தி)

## மழையை அடுத்து பெரும்போகச்செய்கை

(யாழ். நிருபர்)

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் நேற்று முன்தினம் இரவு யாழ். குடாநாட்டில் மழை பெய்யத் தொடங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

பெரும்போக நெற் செய்கையை ஆரம்பிக்குமுகமாக விவசாயிகள் தமது வயல்களில் வரம்பு கட்டுதல், உழுதல் பசளை யிடுதல் போன்ற பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் வாரங்களில் தொடர்ச்சியாக மழை பெய்யுமாயின் அதனைத் தொடர்ந்து நெல் விதைப்பினை ஆரம்பிக்க முடியும் எனவும் விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (10)

# ஊழலை இல்லாதொழிப்பதற்கு ஊடகங்களே சக்திவாய்ந்த சாதனம்

## திறந்த பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர்

(யாழ்.நிருபர்)

ஒருவருடைய தனிப்பட்ட ஆளுமை விருத்திக்குத் தகவல் மிக முக்கியமானது. ஒருவரின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கும், கருத்து வெளியிடுவதற்கும், தகவலைப் பெற்றுக்கொள்வதற்கும் சுதந்திரம் உள்ளது.

குறிப்பாக ஊழலை இல்லாமல் செய்வதற்கும் ஊடகம் ஒரு சக்திவாய்ந்த சாதனமாக அமைகிறது என்று கொழும்பு திறந்த பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் சட்டத்தரணி யசோதரா கதிர்காமத்தம்பி குறிப்பிட்டார்.

யாழ். ரில்கோ ஹோட்டலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குடாநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கான செவிப்புல, கட்புல ஊடக மீள்நோக்கு பயிற்சிச் செயலமர்வில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தகவல் மற்றும் ஊடகததுறை அமைச்சர் ஹெகலிய ரமபுக்வெல தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிச் செயலமர்வில் யசோதா கதிர்காமர் தொடந்து உரையாற்றுகையில்,

மனித உரிமைகள் என்பது யாராலும் எடுக்கப்படவோ அல்லது யாராலும் வழங்கப்படவோ முடியாதவை. ஒரு மனிதன் பிறப்பின் ஊடாகவே சில அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்கிறான். இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகக் காணப்படுகிறது.

மனித உரிமைகள் மீறப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே மனித உரிமைகள் சாசனம் தொடர்பான சரத்துக்கள் காணப்படுகின்றன.

மனித உரிமைகளுள் கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரம் முக்கியமானது. ஜனநாயக நாடுகளில் ஒருவர் கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரத்தைப் பூரணமாகப் பெற்றுக் கொள்கிறார்.



தகவல்களை வெளியிடும் உரிமை என்பது எமது அரசியலமைப்புக்கு அமைய ஒரு முழுமையான உரிமையல்ல. மனித உரிமைகள் சட்டத்தின் வேறு சில சரத்துக்கள் மூலம் இந்த உரிமை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (10)

# யாழில் மர்ம மனிதன் பீதியால் மாணவர்கள் வரவு குறைவு

(யாழ்.நிருபர்)

மூன்றாம் தவணைக்காக நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் யாழ். குடாநாட்டில் பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாகவே காணப்பட்டது.

அண்மைக்காலங்களில் யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கிறிஸ் பூதம், மர்ம மனிதர் நடமாட்டம் போன்றவற்றால் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வே மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்காமைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

பாடசாலைகள் ஆரம்பிக்கும் திகதி தொடர்பாக ஏற்பட்ட குழப்ப நிலையும், மாணவர் வரவு குறைவாக இருந்தமைக்குக் காரணமாக இருக்கலாம் எனவும் சில பாடசாலை அதிபர்கள் கருத்துத் தெரிவித்தனர். (10)

# உடுப்பிட்டி சந்தை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(கரணவாய்)

உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையமூடாக உடுப்பிட்டிச் சந்தைக்குச் செல்லும் பிரதான வீதி மிகமோசமாகச் சேதமடைந்துள்ளதாகவும், இவ்வீதியூடாகப் பயணப் பதில் தாம் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

[illegible]ன்றும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதிப் பகுதியில் சந்தை முன்பள்ளி, ஆலயங்கள் என்பன அமைந்துள்ளதால் நாளாந்தம் அதிகளவு மக்கள் இவ்வீதியைத் தமது போக்கு வரத்துக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதி சேதமடைந்துள்ளமை தொடர்பாக நாவலடி சனசமூக நிலையத்தினர் கரவெட்டிப் பிரதேச சபையிடம் அறிவித்த நிலையில் அப்பிரதேச சபை திருத்தித் தருவதாக உறுதியளித்த போதிலும் இதுவரைஅதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப் படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

அதிகளவு மக்களின் போக்குவரத்துப் பயன்பாட்டில் உள்ள இவ்வீதியை மேற்படி பிரதேச சபை நடவடிக்கை எடுத்துப் புனரமைத்துத் தருமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# நெல் பதனிடும் அபிவிருத்தித் திட்டத்திற்கு 4 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

உலக உணவுத் திட்டத்தின் நிதியுதவியுடன் அறுவடைக்குப் பின்னரான நெல் பதனிடும் கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு பயனாளிகளை இணைத்துக் கொள்ளும் முகமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 4 கிராமங்கள் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தினூடாக அந்தந்தக் கிராம கமக்கார அமைப்புக்கள் தங்களது கிராமங்களில் பயனாளிகளைத் தெரிவு செய்து விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வன்னேரிக்குளத்தில் 20 பயனாளிகளும், சிவநகர் பகுதியில் 16 பயனாளிகளும், முரசுமோட்டை கிராமத்தில் 20 பயனாளிகளும், ஊரியான் கிராமத்தில் 20 பயனாளிகளும் என்ற அடிப்படையில் பயனாளிகள் தெரிவு இடம்பெறவுள்ளது.

உள்ளூரில் விளைகின்ற நெல்லை அங்கேயே பதனிடக்கூடிய வகையில் இந்த பயனாளிகள் தெரிவு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கே)



## பரமர் சங்கமம்

எங்கட பெரிய ஆசுப்பத்திரியில நூறு நல்லது நடந்தா பத்துத் தில்லுமுல்லுகளும் நடக்கத்தான் செய்யுது.

அதைத்தான் நாங்க பேப்பர் வழிய பாக்கிறம். இந்தத் தில்லுமுல்லுகள் சிற்றூழியர்கள் மட்டத்தில கூடுதலா நடக்கு.

ஆண்டவனே எண்டு அரசாங்கம் நல்ல சம்பளம் குடுத்துத்தான் ஆக்களை வேலைக்கெடுத்திருக்கு. அதோட பென்சனும் வேற!

இப்படி வேலையைப் பெற எவ்வளவு கஷ்டப்படவேணும். அப்பிடி வேலையைப் பிடிச்சுப்போட்டு சின்னத்தனமான சில வேலையளால வேலையும் போய் வீதியில நிக்கிற நிலைமை எதுக்கு?

கொஞ்ச நாளைக்கு முந்திப் பேப்பரில வந்தது. பெண்ணின் வாயை பொத்திக்கொண்டு நகையளைத் திருட முயன்ற சிற்றூழியர் கையும், மெய்யுமாகப் பிடிபட்டாரெண்டு!

அதுபோக ஏலாத நோயாளியளைத் தள்ளு வண்டியில எக்ஸ்றே எடுக்கக் கூட்டிக்கொண்டு போய், கூட்டிவாறது, கண் ஒப்பிறேசனுக்கு, சத்திரசிகிச்சை நிலையத்துக்கு கூட்டிப்போய் திரும்ப வாட்டுக்குக் கூட்டிக்கொண்டுவாற சிற்றூழியர்.

அந்த நோயாளிகளிடம் கைவிசேசம் கேட்டுப் பெறுவது பத்தாதெண்டு அவற்ற மகனோ, மகளிடமோ மேலும் வாங்கிக் கொள்வதை நான் கண்டிருக்கிறன்.

இதுபோக சவக்காம்பராவில் வேலை செய்யிற சிற்றூழியர்கள் அதிகப்படியான வருவாயைப் பெற்றுக்கொள்வதாகவும் தகவல் கிடைச்சிருக்கு.

வைத்திய அதிகாரிக்குக் கீழ் செய்கின்ற "இன்பாம்" வேலைகளை சிற்றூழியர்கள் தாமே இறந்தவரின் உறவினரை கைக்குள் போட்டு பிரேதப் பெட்டி 'இம்பாம்' பிரேதவாகனம் இப்படிச் சகல வேலைகளையும் பொருந்துநர் அடிப்படையும் கொந்தராத்து பெற்று ஏறத்தாழ 25 ஆயிரம் ரூபா வரை சம்பாதிப்பதாகவும் கூறப்படுகிறது.

இவர்கள் இம்பாம் செய்யும் மனித உறுப்புக்களைப் பாதுகாப்பாகப் புதைக்காமல் மேலெழுந்தவாரியாகப் போட்டுச் செல்வதால், அந்தக் கழிவுகளிலிருந்து துர்நாற்றம் வீசுவதுடன் நோய்க் கிருமிகள் பரவும் அபாயங்கள் ஏற்படுவதாகவும் பேப்பர்களில செய்தி வருகுது.

சில மாதங்களுக்கு முன்னம் தீவுப் பகுதியில் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய ஆசுப்பத்திரி சிற்றூழியப் பெண்ணின் உடல் கழிவுகள் இவ்விதம் சிற்றூழியர் அகற்றியமை எல்லாம் பேப்பர்களில போட்டதையும் பாத்திருக்கிறமெல்லே!

சிற்றூழியர்கள் மட்டுமே அதற்கப்பாலும் 'சம்திங்' வாங்கிற, கேக்கிற ஆக்கள் ஆசுப்பத்திரி வழிய வேலை செய்யினம்.

அதைக் குடுத்து தங்கட தங்கட வேலைகளைச் சுலபமாகவும், சுணங்காமலும் செய்து கொள்ளுறவையாலதான் முக்கால்வாசி ஊழியர்கள் பழுதாப் போகிறார்கள் அல்ல பழுதாக்கப்படுகிறார்கள்.

இந்த நிலைமை ஆக ஆசுப்பத்திரியில மட்டுமே! கச்சேரி, சிறைச்சாலை எண்டு அரச திணைக்களங்கள் எல்லாத்திலும் பரந்து கிடக்குப் பாருங்கோ!

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

**07.09.2011 புதன்கிழமை**

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆவணி 21 ஆம் நாள்.
இராகுகாலம் 12.04–1.34, சுபநேரம் 4.34 –6.04,
நட்சத்திரம்: பூராடம் பி.இ 1.18 வரை
திதி: தசமி பி.ப 1.08 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, தேக ஆரோக்கியம், மருத்துவச் செலவு. தெய்வ தரிசனம்.

ரிஷபம:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆ ரோக்கியம், நண்பர் தொல்லை, தெரு விபத்து வரலாம்.

மிதுனம் :– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, நண்பர் தொல்லை, கடன் தொல்லை, உடல் சுகக் குறைவு.

கடகம்:– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தேக சுகக் குறைவு, அதிகாரப் போட்டி, அயலவர் தொல்லை.

சிம்மம்:– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், நண்பர் வருகை, தேக சுகக் குறைவு, மனக்கிலேசம்.

கன்னி :– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தேகசுகக் குறைவு, வீதி விபத்து.

துலாம் :– பணக் கஷ்டம், மனக் கிலேசம், நண்பர் தொல்லை, உறவினர் வருகை, மருத்துவச் செலவு.


விருச்சிகம்:– குடும்பத்தில் நிம்மதி, பணவரவு, தேக ஆரோக்கியம், மன மகிழ்ச்சி, கடன் வசூல்.

தனுசு:– பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மனக் கிலேசம், நண்பர் தொல்லை, மருத்துவச் செலவு.

மகரம:– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தேகசுகக் குறைவு, மனக் கிலேசம், மருத்துவச் செலவு.

கும்பம் :–பணக் கஷ்டம், தேக நிலை பாதிப்பு, குடும்பத்தில் கவலை, கடன் தொல்லை, மன நிம்மதியின்மை.

மீனம்:– குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், மேலதிக பாதிப்பு, நண்பர் தொல்லை, மனக்கிலேசம்.



அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரநாராயணர் ரதத்தில் ஆரோகணித்து உலா வரும் காட்சி. (68)

# அலுவலகம் அமைக்க என்றிப் திட்டம் நிதியுதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் விதை அத்தாட்சிப் படுத்தும் திணைக்களத்ததை அமைப்பதற்கான நிதியுதவியை என்றிப் திட்டம் வழங்கியுள்ளது.

குறித்த மாவட்டத்தில் நல்லின விதைகளை அத்தாட்சிப்படுத்தக்கூடிய அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு இத்திட்டத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது விவசாயிகள் தங்களுக்குத் தேவையான நல்லின விதைகளை விவசாய ஆராய்ச்சித் திணைக்களத்தினூடாகப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)

# கொலின்ஸின் கால்பந்தாட்டத் தொடர் அரையிறுதிக்கு அணிகள் முன்னேற்றம்

(யாழ்ப்பாணம்)

கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் விலகல் முறையிலான கால்பந்துத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு சக்கோட்டை சென் சேவியர் வதிரி டைமன்ட் மற்றும் நவுண்டில் கலைமதி, நெடியகாடு அணிகள் தகுதி பெற்றுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்றுவரும் இக் கால்பந்தாட்டம் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் முதலாவதாக இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் சக்கோட்டை சென் சேவியர் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணி மோதியது.

போட்டி ஆரம்பம் முதலே தாக்குதல் ஆட்டத்தை சென் சேவியர் அணி வெளிப்படுத்தியது. போட்டி நிறைவுக்கு வந்த வேளை 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியில் விளையாடும் வாய்ப்பை சென் சேவியர் அணி பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் வதிரி டைமன்ஸ் அணியை எதிர்த்து வல்லை ஆதிசக்தி அணி மோதியது.

வதிரி டைமன்ஸ் அணியின் சிறப்பான பந்துப் பரிமாற்றத்தின் மூலம் பந்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததுடன் போட்டியில் ஆதிக்கமும் செலுத்தியது. இறுதியில் 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற டைமன்ஸ் அணி அரையிறுதியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றது.

மற்றைய இரு காலிறுதிப் போட்டி சென் அன்ரனி அணியை எதிர்த்து நவுண்டில் கலைமதி அணி மோதியது. இதில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற கலைமதி அணி அரையிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

நான்காவதாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் நெடியகாடு அணியும், நக்கீரன் அணியும் மோதியது. இதில் நெடியகாடு அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டியில் விளையாடுத் தகுதியைப் பெற்றது.

இதன்படி முதலாவது அரையிறுதியில் சக்கோட்டை அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் அணியும், இரண்டாவது அரையிறுதியில் நவுண்டில் கலைமணி அணியை எதிர்த்து நெடியகாடு அணியும் மோதவுள்ளன. (எஸ்).

## காலிறுதியில் மோதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்படும் பிரிவு மூன்றின் காலிறுதிப் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியும் மொனராகல வெள்ளவாய மத்திய கல்லூரியும் மோதவுள்ளன.

இப்போட்டி மொனராகல வெள்ளவாய மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

இரு கல்லூரி அணிகளின் 17 வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ள இப் போட்டி இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் மிக்கதொரு போட்டியாக அமைந்துள்ளது.

இரண்டாவது சுற்றில் இரு வெற்றிகளைப் பெற்றுள்ள சென் ஜோன்ஸ் அணி, சிறப்பான ஆட்டத்திறனுடன் உள்ளமையால் எதிரணிக்கு பெரும் நெருக்கடி கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கரப்பந்தாட்ட அரையிறுதிக்கு வளர்மதி, நவஜீவன் அணிகளும்

(மட்டுவில்)

அலெக்சன் ஞாபகார்த்த கரப்பந்துத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு மட்டுவில் வளர்மதி மற்றும் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் தகுதி பெற்றுள்ளன.

கைதடி வடக்கு நவ சனசமூக நிலையமும், நவசக்தி விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தி வரும் பிரதேச மற்றும் மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடர் நவசக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வ கின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற தென்மராட்சி பிரதேச மட்ட காலிறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி அணியை எதிர்த்து சாவகச்சேரி ஸ்ரீமுருகன் அணி மோதவிருந்த நிலையில், சாவகச்சேரி ஸ்ரீமுருகன் சமூகமளிக்காததால் மட்டுவில் வளர்மதி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் அரையிறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை மட்டுவில் வளர்மதி அணி பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற யாழ். மாவட்ட மட்ட காலிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' அணியும், உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதியது.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய உடுப்பிட்டி நவஜீவன் அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, இன்று இரவு 7.00 மணிக்கு நடைபெறவுள்ள தென்மராட்சிப் பிரதேச மட்ட அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி அணியை எதிர்த்து கைதடி மின்னொளி அணியும், யாழ். மாவட்ட மட்ட போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து எடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதவுள்ளன. (118)

## யாழ். பல்கலைக்கழக ஹொக்கி சுற்று இறுதிப் போட்டியில் கிறாஸ்ஹொப்பர்ஸ்

(நெல்லியடி)

யாழ். பல்கலைக்கழகத்தினால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் ஹொக்கிச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டிக்கு கிறாஸ்ஹொப்பர்ஸ் அணி தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் மாலை நான்கு மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் யாழ். ஸ்ரார் அணியை எதிர்த்து கிறாஸ் ஹொர்ப்பர்ஸ் அணி மோதியது.

ஆட்டம் தொடங்கி இடைவேளை வரை இரு அணிகளும் கோல் போட முயற்சித்தபோதிலும் இரு அணிகளதும் பின் வரிசை தடுப்புச் சுவரைத் தாண்டி கோல் போட முடியவில்லை.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோதிலும் இதேநிலையே நீடித்தது. எனினும் ஆட்ட முடிவடைவதற்கு மூன்று நிமிடங்கள் இருந்த நிலையில் 57ஆவது நிமிடத்தில் கிறாஸ்ஹொப்பர் அணி வீரர் அரவிந்தன் மிகவும் லாவகமான முறையில் தனது அணிக்காக ஒரு கோலைப் போட்டார். இதனால் கிறாஸ் கொப்பர் அணி 1-0 என முன்னிலை பெற்றது.

எனினும் ஸ்ரார் அணி கோல் போட முயன்றபோதிலும் ஆட்டம் நிறைவடைந்தது. இதனால் இறுதிப் போட்டிக்குச் செல்லும் வாய்ப்பை ஸ்ரார் அணி இழந்தது.

இதேவேளை, இன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென் ஜோன்ஸ் அணி மோதவுள்ளது. (12)

# அமரர் பிரபாகரன் கிரிக்கெட் உபயகதிர்காமம் காலிறுதியில்

(தும்பளை)

பிரபாகரன் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு உபயகதிர்காமம் அணி தகுதிபெற்றுள்ளது.

தும்பளை விவேகானபந்தா விளையாட்டுக் கழகம் அமரர் இ. பிரபாகரன் ஞாபகார்த்தமாக நடத்தியவரும் 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடர் தும்பளை விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டி ஒன்றில் ரூனி அணியும், புலோலி உபய கதிர்காமம் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ரூனி அணி 15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோகுலன் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கோகுலதாஸ் நான்கு, டினேஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய உபயகதிர்காமம் அணி 14 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நிதர்சன் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ரவீந்திரன், கௌதமன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியின் வெற்றிபெற்றதன் மூலம் உபயகதிர்காமம் அணி காலிறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றது. (62)

## கால்பந்தாட்டச் சுற்றில் வென்று தீவக சம்பியனானது ஐயனார்

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம் நடாத்திய கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற வேலணை ஐயனார் அணி கிண்ணத்தை வென்று தீவக சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாரந்தனை அண்ணா முன்னேற்ற அணியும் வேலணை ஐயனார் அணியும் மோதின. ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் அண்ணா அணி முதல் கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இதனை அடுத்து வீறுகொண்டெழுந்த ஐயனார் அணி வீரர்கள் அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட, ஆட்ட நேர முடிவில் 3-1 என்ற கோல் கணக்கில் ஐயனார அணி வெற்றி பெற்று தீவக சம்பியனானது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்தரி அலன்ரின் கிண்ணத்தை வழங்கி வைத்தார். (65)

## பதுளை பயணம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய கால்பந்தாட்டப் போட்டித் தொடர் வடமாகாணம் சார்பாக பற்குபற்றவுள்ள வடமராட்சி வதிரி தேவராயாளி பாடசாலை அணி இன்று பதுளை பயணமாகவுள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டக் கால்பந்தாட்டத் தொடர் பதுளை வின்சன் மைதானத்தில் நாளை முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடர்களில் மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகள் பங்குபற்று கின்றன.

இதில் வடமாகாணம் சார்பாக யாழ். மாவட்டத்திலிருந்தும் வடமராட்சி வதிரி தேவராயாளி பாடசாலை தெரிவாகியிருந்தது. தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ள இப் பாடசாலை இன்று பயணமாகவுள்ளது. (எஸ்)



யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்திய குமாரசுவாமி ருவென்ரி 20 தொடரில் இரண்டாவது இடத்தைப் பெற்ற பற்றீசியன் அணி வீரர்கள் உற்சாகமுடன் காட்சி தருகின்றனர். இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் அணியிடம் தோல்வியடைந்தது. இப்போட்டித் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (07)

## முறையிட முடிவு

(புதுடில்லி)

வர்ணனையாளர் நஸார் ஹுசைன் கருத்துக் குறித்து, இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடம் முறையிட இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபைத் துணைத் தலைவர் ராஜிவ் சுக்லா கூறியதாவது:

வர்ணனையாளர்களாக இருப்பவர்கள் குறிப்பிட்ட சிலவற்றைக் குறித்துப் பேசும் போது, மிகவும் கவனமாக இருக்கவேண்டும். சில கருத்துக்கள் போட்டிக்கு முற்றிலும் தொடர்பு இல்லாமல் உள்ளது. இவற்றை வெளியிடுபவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும். நஸார் ஹுசைன் விவகாரம் குறித்து, இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடம் முறையிட நாம் முடிவு செய்துள்ளோம் இதன் மூலம் எதிர்காலத்தில் இது போன்ற சர்ச்சைகளைத் தவிர்க்கலாம் எனவும் தெரிவித்தார்.

## 2015 உலகக் கிண்ணம் இங்கிலாந்து அணிக்காம்

(லண்டன்)

2015இல் நிச்சயம் உலகக் கிண்ணத்தை இங்கிலாந்து அணி கைப்பற்றிக் கொள்ளும் என்று மைக்கல் வோகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி தற்போது மிக பலமிக்க அணியாக உருவாகி வருகிறது. 2015இல் நிச்சயம் உலகக் கிண்ணத்தை வெல்வார்கள். அணியில் திறமையான வீரர்களாக 22 பேர் உள்ளனர். இதனால், சுழற்சி முறையில் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் நிச்சயம் உலக சம்பியன் ஆகலாம் என்றார்.

கிரிக்கெட் விளையாட்டை உருவாக்கிய நாடான இங்கிலாந்து இதுவரை உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு 3 முறை தகுதி பெற்று, ஒரு முறை கூட கிண்ணத்தை வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய பந்து வீச்சுப் பாணியை கைவிட்ட இங்கிலாந்து அணி

(லண்டன்)

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில், புதிய திட்டத்தில் பந்து வீச்சை மேற்கொள்ளவிருந்த இங்கிலாந்து அணியினர், கடைசிநேரத்தில் பின்வாங்கியது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து "த டெய்லி டெலிகிராப்" என்ற பத்திரிகையில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இங்கிலாந்து வீரர்கள் புதிய முறையில் பந்துவீசும் திட்டத்தில் தயாராகி இருந்தனர். அதாவது, பந்துவீச ஓடிவரும் வலதுகை பந்து வீச்சாளர்கள் வழக்கமாக, பந்தை வலது கையில் வைத்துதான் வீசுவார்கள். புதிய திட்டத்தின் படி, பந்தை இடது கையில் வைத்துக் கொண்டு ஓடிவருவது, பின் பந்துவீசும்போது உடனடியாக வலதுகைக்கு மாற்றி, பந்துவீசும் திட்டத்தில் இருந்தனர். வலைப்பயிற்சியிலும் இதேபோன்று தான் பயிற்சியில் ஈடுபட்டார்களாம்.


சமீபத்தில் முடிந்த நொட்டிங்ஹாம் டெஸ்ட் போட்டியில், இயன் பெல்லின் சர்ச்சைக்குப்பின், இந்த முறையில் பந்து வீசத் திட்டமிட்டனர். ஆனால், இது இரு பெரிய கிரிக்கெட் சபைகளின் உறவை பாதித்துவிடும் என்பதால் இத்திட்டத்தை கைவிட்டனராம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் விதி 42.1 இன்படி, விளையாட்டு உணர்வுடன், போட்டியின் பாரம்பரியம் பாதிக்கப்படாமல், கிரிக்கெட் நடப்பதை இரு அணி கப்டன்களும் உறுதி செய்ய வேண்டும்.

விதி 42.2 இன்படி துடுப்பாட்ட வீரர்கள் பந்தை எதிர்கொள்ள தயாராகும் போது அல்லது எதிர்கொள்ளும்போது, எந்த வீரரும் அவரது கவனத்தை திசை திருப்பும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது.

இதனால் தான், இங்கிலாந்து வீரர்கள் பின்வாங்கினர் என்று தெரிகிறது.

## சச்சின் விலகினார்



(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் கால் பெருவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரிலிருந்து விலகிக் கொண்டார்.

டெண்டுல்கர் குறைந்தபட்சம் 4 வாரங்கள் ஓய்வு எடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் அறிவுறுத்தி உள்ளனர். இதனையடுத்து அவர் விரைவில் தாயகம் திரும்பவுள்ளார்

இதேவேளை, அவருக்குப் பதிலாக தமிழகத்தைச் சேர்ந்த பத்ரிநாத் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனை இந்திய கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

## இந்திய அணியின் சிறந்த செயற்பாடு அரை நிர்வாணத்தில் பூனம்பாண்டே



(புதுடில்லி)

இந்தியாவின் முன்னணி மொடல் அழகியான பூனம் பாண்டே உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்பு இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றால் நிர்வாணமாக ஓடுவேன் என்று தெரிவித்து இருந்தார்.

அதற்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியதால் அவர் அந்த அறிவிப்பை நிறைவேற்றவில்லை. இந்த நிலையில் பூனம் பாண்டே தற்போது இந்திய அணியினருக்காக புதிய நடவடிக்கையில் இறங்கி உள்ளார்.

அவர் இந்திய அணி சிறப்பாகச் செயற்படுவதற்காக தனது அரை நிர்வாணப் படத்தை டுவிட்டர் இணையத்தளத்தில் மைக்ரோ வலைப்பகுதியில் வெளியிட்டுள்ளார். இது குறித்து பூனம் பாண்டே டுவிட்டரில் வெளியிட்டுள்ள கருத்தில், இங்கிலாந்தில் விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணியை உத்வேகப்படுத்தும் நோக்கில் இந்தப் படத்தை வெளியிட்டுள்ளேன். இந்திய அணி, இங்கிலாந்தை தோற்கடிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்தத் தொடரில் ஒவ்வொரு போட்டியிலும் இந்திய அணி வெற்றி கண்டால் ஆச்சரியம் அளிக்கும் வகையில் சில விடயங்களை செய்ய முடிவு செய்துள்ளேன். இந்திய அணியின் செயற்பாட்டைக் கூர்ந்து கவனித்து வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## டி.ஆர்.எஸ். முறையில் தவறு ஒப்புக்கொள்கின்றது ஐ.சி.சி.

(டுபாய்)

டி.ஆர்.எஸ். முறையில் சில தவறுகள் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ள சர்வதேச கிரிக்கெட் சபை இது குறித்து வரும் 12ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

International Cricket Council

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ராவிட்டுக்கு வழங்கப்பட்ட ஆட்டமிழப்பு பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறையின் (டி.ஆர்.எஸ்) கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஆட்டமிழப்புத் தவறு என்பது தெரியவந்துள்ளது.

இதேபோல் இலங்கை-அவுஸ்ரேலிய அணிகள் இடையிலான டெஸ்ட் போட்டித் தொடரிலும் சில தவறான முடிவுகள் வழங்கப்பட்டதாக பிரச்சினை ஏற்பட்டுள்ளது. டி.ஆர்.எஸ். முறையில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பக் கருவியின் செயற்பாட்டில் உள்ள சந்தேகம் குறித்து இலங்கை போட்டி நடுவர்கள் வீடியோக் காட்சியை ஐ.சி.சி.க்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதனைப் பரிசோதித்துப் பார்த்த ஐ.சி.சி. டி.ஆர்.எஸ். முறையில் சில தவறுகள் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளது. இது குறித்து வருகிற 12ஆம் திகதி நடைபெறும் ஐ.சி.சி.விருது வழங்கும் விழாக் கூட்டத்தில் ஆலோசனை செய்யப்படும் என்றும், இதன் பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிகிறது.

## இளம் வீரர்களுக்கு நல்ல வாய்ப்பாம்





(லண்டன்)

முன்னணி வீரர்கள் ஆறு பேர் விலகியுள்ள நிலையில் இங்கிலாந்து அணிக்கெதிரான மீதமுள்ள போட்டிகளில் இளம் வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக பார்த்தீவ் பட்டேல் தெரிவித்துள்ளார்.

இளம் வீரர்கள் தங்கள் திறமையை நிரூபித்துக் காட்ட இது நல்ல வாய்ப்பாகும். அவர்கள் அதனை செய்து காட்டினால் அவர்களுக்கு மட்டுமின்றி அணிக்கும் நல்லதாகும். நான் எனது வழக்கமான ஆட்ட பாணியில் தான் விளையாடுவேன். எனது ஆட்டத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை. எல்லோருக்கும் அதிக ரன் சேர்க்க வேண்டிய பொறுப்பு உள்ளது என்று தெரிவித்துள்ளார்

## பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டனர்





(டாக்கா)


பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் கப்டன் சாகிப் அல் ஹசன், துணைக் கப்டன் தமீம் இக்பால் ஆகியோர் அப்பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

சிம்பாப்வே சுற்றுப் பயணத்தில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்குப் பதிலாக யாரை தலைமைப் பொறுப்புக்களில் நிய மிப்பது குறித்து ஆலோசித்து வருவதாகவும் கிரிக்கெட் சபை மேலும் தெரிவித்துள்ளது.

சிம்பாப்வேயுடனான ஒரு நாள் தொடர் மற்றும் டெஸ்ட் தொடரை பங்களாதேஷ் அணி இழந்தமை குறிப்பிடத்தக்கது.

தோல்விக்கு போதியளவு தயார்ப்படுத்தலின்மையே காரணம் என சாகிப் அல் ஹசன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் சுவனரேவா, ஸ்டோசர் காலிறுதியில்



(நியூயோர்க்)

அமெரிக்கன் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் போட்டியில் சுவனரேவா, ஸ்டோசுர் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறினர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், அமெரிக்கன் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் நான்காவது சுற்றில், ரஷ்யாவின் சுவனரேவா, ஜெர்மனியின் சபைன் லிசிக்கியை சந்தித்தார்.

இதன் முதல் செட்டை 6-2 என சுவனரேவா எளிதாக வென்றார். இரண்டாவது செட்டிலும் தொடர்ந்து அசத்திய இவர், 6-3 எனக் கைப்பற்றினார். இறுதியில் 6-2, 6-3 என்ற நேர்செட்கணக்கில் வெற்றி பெற்ற சுவனரேவா காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசுர், ரஷ்யாவின் கிரிலென்கோவை 6-2, 6-7, 6-3 என போராடி வென்று, காலிறுதிக்குத் தகுதி பெற்றார். மற்ற நான்காவது சுற்று போட்டிகளில் இத்தாலியின் பெனிட்டா, ஜெர்மனியின் கெர்பெர் வெற்றி பெற்று, காலிறுதிக்குள் நுழைந்தனர்.

ஆண்கள் ஒற்றையர் மூன்றாவது சுற்றில் ஸ்பெயினின் நடால், ஆர்ஜன்டீனாவின் நல்பாந்தியனை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால், 7-6, 6-1, 7-5 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.




மற்றொரு போட்டியில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, ஸ்பெயினின் பெலிசியானோ லோபசை, 6-1, 6-4, 6-2 என்ற செட்கணக்கில் வீழ்த்தி, நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

பிற மூன்றாவது சுற்றுப் போட்டிகளில் ஆன்டி ரோடிக், ஜான் இஸ்னர், டொனால்டு யங் (அமெரிக்கா), ஜைல்ஸ் முல்லர் (லக்சம்பர்க்), டேவிட் பெரர் (ஸ்பெயின்) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

ஆண்கள் இரட்டையர் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, பாகிஸ்தானின் அல் குரேஷி ஜோடி, அவுஸ்ரேலியாவின் ஹென்லே, பெல்ஜியத்தின் நார்மன் ஜோடியை 6-2, 6-3 என்ற செட்கணக்கில் வென்று, காலிறுதிக்கு முன்னேறியது.

# மாற்று பொருளாதார கட்டமைப்பிற்கு நாட்டில் ஆட்சிமாற்றம் அவசியமாகும்

## என்கிறது ஜே.வி.பி



(கொழும்பு)

நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது.

மாற்றுக் கொள்கையுடைய பொருளாதாரக் கட்டமைப்பு ஒன்றை நாட்டில் அமுல்படுத்துவதற்கு ஆட்சி மாற்றம் அவசியமானது என ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பெலவத்த பிரதேசத்தில் அமைந்துள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிற்போக்கான செல்வந்த வர்க்கத்தினால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

தற்போதை ஆட்சியாளர்கள் போலியான தேசிய பொருளாதாரமொன்றை வெளிக்காட்டுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளையே தற்போதைய ஆட்சியாளர்களும் பின்பற்றுகின்றனர்.

சோசலிச கொள்கைகளின் அடிப்படையிலான நாட்டுக்கு பொருத்தமுடைய பொருளாதார முறைமையொன்றை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியமானது.

போலியான அபிவிருத்தி என்னும் கரட்டை காட்டி காட்டி மக்களை ஆட்சியாளர்கள் ஏமாற்றுகின்றனர்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி தொடர்பான பிரசாரங்கள் வெறும் மாயையே ஆகும்

அரச ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவதாக ஜனாதிபதி அளித்த வாக்குறுதி இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

பெருமளவிலான இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி அவதியுறுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# கனேடிய மாகாணத் தேர்தலில் புலிகளின் ஆதரவாளர்களே அதிகம்

## கவலை கொள்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

கனேடிய மாகாணத் தேர்தலில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது குறித்து இலங்கை அரசாங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

கனடாவில் மாகாணங்களுக்கான தேர்தல் ஒக்ரோபர் ஆறாம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் விடுதலைப் புலிகள் சார்புக் குழுக்கள் பலவும் ஆதிக்கம் செலுத்தி வருவதாக இலங்கை அரசாங்கம் கவலையடைந்துள்ளது.

இதுதொடர்பாக கனேடிய வெளிவிவகார அமைச்சுக்கு ரொறன்ரோவில் உள்ள இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வகீஸ்வரா கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இது குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அவர் கனேடிய வெளிவிவகார அமைச்சுக்கு கூறியுள்ளார்.

அதேவேளை விடுதலைப் புலிகள் சார்பு அமைப்புகளின் ஆதிக்கம் கனேடியத் தேர்தலில் அதிகரித்து வருவது குறித்து இலங்கை அரசாங்கம் கவலையடைந்துள்ளதாகவும் சித்திராங்கனி வகீஸ்வரா கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ளார்.

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கே கூட்டமைப்புடனான பேச்சு ஆரம்பமானது

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

**தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,**

பேச்சுவார்த்தைகளின் இடைநடுவில் நிபந்தனைகளை விதிப்பது எந்தளவிற்கு நியாயமானது?

தீர்வுத் திட்டத்தை எட்டுவது தொடர்பில் அரசாங்கத்தின் சார்பிலான அர்ப்பணிப்புக்களில் மாற்றமில்லை.

காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குவது எந்தளவிற்கு பொருத்தமானது என ஆராயப்பட வேண்டியது அவசியமானது.

இந்தியாவில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கிழக்கில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருவதாகவும் அனைவரினதும் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

பூரணமான அரசாட்சியொன்று உலகில் எந்தவொரு நாட்டிலும் கிடையாது, எல்லா நாட்டு ஆட்சிகளிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

100 வீதம் சிறந்த ஆட்சி எந்த நாட்டிலும் கிடையாது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அமைக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அனைத்து கட்சிகளும் பங்கேற்கும்.

இலங்கைக்கு எதிராக சில சக்திகள் தொடர்ச்சியாக சதித் திட்டங்களைத் தீட்டி வருகின்றன.



விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் வலுவாக இயங்கி வருகின்றது.

ஈழ இராச்சியமொன்று இலங்கையில் கட்டியெழுப்பப்பட வேண்டுமென வலியுறுத்தும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் ஐரோப்பாவில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நபர்களுக்கு எதிராக இலங்கையர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

கடந்த தடவையைப் போன்று இந்தத் தடவையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸில் கூட்டத்தில் சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுக்க தயார் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் ஆதரவு இல்லாது போனால் பிரபாகரனை நேட்டோ காப்பாற்றியிருக்கும்

## அமைச்சர் டலஸ் கூறுகிறார்

(கொழும்பு)

போரின்போது இந்தியா உறுதியான ஆதரவை வழங்கியிருக்காது போனால், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் முக்கிய தளபதிகளையும் நேட்டோ வான்வழியாக மீட்டுச் சென்றிருக்கும் என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்டப் போரின் போது படைகளுக்கு இந்தியா உறுதியான ஆதரவை வழங்கியதால் தான்,நேட்டோவின் கனவு பலிக்காது போனதாகவும் அவர் கூறியுள்ளார்.

தென்மாகாணத்தில் உள்ள வலஸ்கல என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கிளிநொச்சியைக் கைப்பற்றிய பின்னர் இராணுவத்தின் எட்டுப் படைப்பிரிவுகள் முல்லைத்தீவு நோக்கி முன்னேறிச் சென்றபோது, பிரபாகரனையும், அவரது குடும்பத்தினரையும்,முக்கிய தளபதிகளையும் வான்வழியாக மீட்க சில



வெளிநாட்டு சக்திகள் திட்டமிட்டிருந்தன.

அதிஷ்டவசமாக இந்தியா துணை நின்றதால் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இலங்கைக்கு எப்போதுமே ஒரு உண்மையான நண்பனாக இந்தியா இருப்பதாகவும்,அதன்மூலமே விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை வெற்றி கொள்ள முடிந்தது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு புலிகளின் ஆதரவாளர்களால் குந்தகம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த முயற்சி செய்து வருதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கங்களும், சிவில் அமைப்புக்களும் இந்த விடயம் குறித்த விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய விசேட சொற்பொழிவின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நிதிச் சந்தைகள் மற்றும் தேசிய பொருளாதாரத்தை சீர்குலைக்கும் நோக்கில் தீவிரவாத அமைப்புக்கள் செயற்பட்டு வருவதகாவும் சட்டவிரோத நிதிக் கொடுக்கல் வாங்கல்களை கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உலக அளவில் சட்டவிரோத நிதிக் கொடுக்கல் வாங்கல் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகவும்

மூன்றாம் நாடொன்றைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிளேக்கின் கொழும்புப் பயணம் இதுவரை தீர்மானிக்கவில்லை

## அமெரிக்க தூதரக அதிகாரி தகவல்

(கொழும்பு)



அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் செப்ரெம்பர் 14ஆம் திகதி கொழும்பு வரவுள்ளதாக வெளியாகியுள்ள செய்தியை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளது.


றொபேட் ஓ பிளேக்கின் மீள் பயணத் திட்டம் குறித்து இன்னமும் எந்த அறிவிப்பும் வரவில்லை என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக ஊடக அதிகாரி கிறிஸ்ரொபர் எல்ம்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்தமாத இறுதியில் கொழும்பு வரத் திட்டமிட்டிருந்த பிளேக் ஐரின் சூறாவளியினால் தனது பயணத்தைப் பிற்போட்டிருந்தார்.

எனினும் அவர் எதிர்வரும் 12ஆம் திதகி கொழும்பு வரவுள்ளதாக சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டிருந்தது.

அதேவேளை மற்றொரு கொழும்பு ஊடகம் எதிர்வரும் 14ஆம் திகதி பிளேக் கொழும்பு வரவுள்ளதாக நேற்றுமுன்தினம் தகவல் வெளியிட்டிருந்தது.


இந்தநிலையிலேயே,பிளேக்கின் மீள்பயணத் திட்டம் குறித்து இன்னமும் அறிவிக்கப்படவில்லை எனறு அமெரிக்க துதரக ஊடக அதிகாரி தகவல் வெளியிட்டுள்ளார்.




Mr. N.Pathmarajah
[I.S.A (Eng)]
Zonal Education Office- Islands

# General Certificate of Education (Ord.Level) Examination, December- 2011

Time: 3 Hour




# கல்வி முரசு O/L





## ENGLISH LANGUAGE PART - I

யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**01) Fill in the space . The first one is done for you .**

Riyaz is a student . He loves  g a r d e n in g a lot . He grows so many vegetable  _ _ _ ps . They are  _ _ _ _jal which he likes a lot  _ _ _ _ in which all his family members like very much . bitter court , snake court drum stick lady's finger and  _ _ _ _toes.

He sells vegetables to the villagers. the  _ _ _ _ _ _ _per near by come to him get vegatables to be sold.


Riyaz's uncle is a vegatable seller at the  _ _ _ ket. He takes vegetables from Riyaz to the fair. Riyaz has a penfriend in  _ _ _ia. Heis Ramu. They usually exchange their ideas through  _ _ _ _ers. Ramu sends  _ _ _ ds to Riyaz. Riyaz gets much  _ _ _ey from his leisure time activity.

**02) Complete the dialogue by selecting correct response from the box given. Put the number in the space . First one is done for you.**

| | | |
|---|---|---|
| Salesman | :- | Good morning , Can I help you ? |
| Customer | :- | ...........5.......................... |
| Salesman | :- | You want a full sleeved or ......................? |
| Customer | :- | ........................................ |
| Salesman | :- | What about this one ? |
| Customer | :- | ........................................ |
| Salesman | :- | O.K . We have plenty of plain shirts. Here's one. |
| Customer | :- | Don't you think it's too small for me ? |
| Salesman | :- | ........................................ |
| Customer | :- | Then I'll take it . How much is it ? |
| Salesman | :- | ........................................ |
| Customer | :- | Here's the money . |
| Salesman | :- | ........................................ |

| | |
|---|---|
| 1) Pay the cash at the counter. | 2) It's only Rs 750/= |
| 3) I dont wear checked ones. | 4) No, it suits you sir |
| 5) I'm looking for a shirt | 6) a half sleeved shirt |

**03) Look at the picture and write 5 (five) sentences about it.**



..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

**04) Read the following passage and complete the table.**

The Game of volley ball was originated in the US in 1895. It is a very fast and skillful ganme. It is one of the most popular international sports both for men and women. Volleyball was introduced with five players each five other across a net, three metres high. A player from one team serves the ball over the net with his hand or arm.

The player of the other team receiving the ball tries to keep the ball up the ground. They can touch it three times before returning it over the net. No player can touch the ball twice in a row. Only the team that serves the ball can socre points. The serving team scores the point if the ball hits the ground in the opponent team's court.

The point also goes in favour of the serving team if the other team hits the ball into the net of out of bound. It the serving team hits the ball straight into the net or out of the bound while serving, it loses the service is changed over. Now the other team starts serving to secore points. The team that scores 15 points first is declared the winners.

1. Where was volley ball originated? When?
..........................................................................
2. When was it introduced in the Olympic Games?
..........................................................................
3. How many players are there in a Volley ball team?
..........................................................................
4. How high is the net?
..........................................................................
5. What do the players of the receiving team try to do?
..........................................................................

**05) Complete the telephone conversation selecting the correct utterances from the box. Write the letter in the space. First one is done for you.**

| | |
|---|---|
| Ruba | : Hello, Is it 0213007212? |
| Receptionist | :Yes, who's speaking? |
| Ruba | : I'm Rubala from Colombo speaking. |
| Receptionist | : ........................................ |
| Ruba | : I want to follow a course in your centre. How many compuer courses are available? |
| Receptionist | : ........................................ |
| Ruba | : When are the courses commenced? |
| Receptionist | : ........................................ |
| Ruba | : |
| Receptionist | : You can adjust it according to your work schedule. |
| Ruba | : What about the course fees? |
| Receptionist | : ........................................ |

1) They are starting on 15th December?
..........................................................................
2) How can I be assistance with you?
..........................................................................
3) You can pay it into 4 instalments?
..........................................................................
4) More than 5 useful packages?
..........................................................................
5) When will the practical classes be held?
..........................................................................

**06) Write a paragraph on any one of the following.**

1) Home gardening should be motivated.
2) Man and Resources.

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

**07) Read to following letter and answer the questions given below.**

55/1, Poonari lane,
Kokuvil west,
Kokuvil.
20 th Oct 2010

Raju,
It's a good news! Congratulations! You have been selected for the Cricket team. You will have to attend the practices after your office hour. Don't miss the practices. Best of luck.

Kumar.

1) Who wrote this letter?
..........................................................................
2) What is this letter about?
..........................................................................
3) Is the receiver a staff at any office?
..........................................................................
4) How does the writer greet the receiver?
..........................................................................
5) What will the receiver have to do?
..........................................................................

**08) You are the secretary of the English Literary Association of your school.**

You have planned to conduct an English Camp.
Write a notice calling all students to take part in the camp activities. U se about 50 words.
Include the following,
Date, Time, Place, Purpose.

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

# ENGLISH LANGUAGE PART - II

**09) Read the text and fill in the blanks in the text. One is done for you.**

Nattaranpota is famous for Brassware. The main ............................... (occupant, occupy, occupation) of the people of Nattaranpota is .................... (made, make, making) brassware. It is a .............................(fascinated, fascinate, fascinating) process.

First the brass is.............................(melting. melted, melt) and the ...................................(melt, melting, melted) brass is poured into moulds. Then the craftsmen begin to carve designs.

It's wonderful to see the craftsmen working under a..................................... (leading, leadership, lead).

The master craftsman trains the apprentices. The apprentices go on training until they become more familiar with the job.

The................................(fine, final, finally) test of a good workman is to have the skill to make a ..............................(flawless, flow, flowing) brass lamp. Many..................................(tour, tourists, tourism) visit this place to buy these items. The..................................(villagers, village, villages) get a good ..........................(earn, earning, earner) from this.

**10) Read the following statements. They are mixed. Put them in correct order. One is done for you.**

1) He had an ambition to become an engineer and serve the country. ☐
2) Washington also was injured and left with brain damage. ☐
3) John Rowling was an American. [1]
4) Many experts said it was impossible. ☐
5) In 1883 he was inspired by the idea of building a bridge connecting New York with long Island. ☐
6) His son Washington came forward to help him. ☐
7) It was his dream and he wanted to fufil his wish. ☐
8) But a tragic accident at the site took the life of John. ☐
9) He didn't give up. ☐
10) The project started and went on well. ☐
11) Everyone felt that the project should be scrapped. But he completed the project with his wife's help. ☐

**11) This is the survey taken from schools. Look at the table and answer the questions.**

| Name of School | Volleyball | Football | Cricket | Kabadi |
|---|---|---|---|---|
| J/Hindu College | 40 30 | 60 | 20 | |
| J/Central College | 50 40 | 90 | 10 | |
| J/Kokuvil Hindu College | 60 30 | 70 | 30 | |
| J/Velanai Central College | 30 20 | 50 | 05 | |

1. Name the game most students like to play?

2. Which school students have less interesting in playing Kabadi?

3. In J/Kokuvil Hindu College how many students like to play volleyball?

4. How many schools and games have been taken into the study?

6. Name the less popular game?

**12) Read the poem and answer the questions.**

**Past and Present**

I remember, I remember
The house where I was born,
The little window where the sun
Came peeping in at morn;
He never came a wink too soon
Nor brought too long a day;
But now, I often wish the night
Had borne my breath away.

I remember, I remember
The roses, red and white,
The violets, and lily-cups--
Those flowers made of light!
The lilacs where the robin built,
And where my brother set
The laburnum on his birthday,--
The tree is living yet!

I remember I remember
Where I was used to swing,
And thought the air must rush as fresh
To swallows on the wing;
My spirits flew on feathers then
That is so heavy now,
And summer pools could hardly cool
The fever on my brow

I remember I remember
The fir tree dark and high;
I used to think their slender tops
Were close against the sky:
It was a childish ignorance,
But now 'tis little joy
To know I am farther off from Heaven
Than when I was a boy.

**Thomas Hood.**

1. Write the name of the poet and the title of the poem?
..........................................................................

2. According to him what is the kind of air he enjoyed as a young boy?
..........................................................................

3. Describe the house of the poet in your own words?
..........................................................................

4. What ore the flowers he remembers?
..........................................................................

5. Find the rhyming words to the following.
I) white:..........................
II) high:...........................

**13) You are the secretary of the Nature Club of your school. You have planned to conduct an awareness programme on " Save the Trees - Cut them not"**

Write a letter to the principal of your school asking for permission to conduct the above programme at school and use the main hall. Include the following.

1. Give date and time.
2. No. of students participating in the programme.
3. Name of the guest speaker who delivers the speech.
4. Any other items.

**14) A firm making and marketting leather bags wants to recruit management trainees in their branches.**

It asks you to write out an advertisement to be published in the newspaper. Include the following:-

1. Age
2. Educational and other qualifications needed.
3. Salary
4. Closing date
5. Address of the firm

**15) Read the follwing Passage and answer the questions given below.**

There were a donkey, a dog, a cat, and a rooster who were very old and were no longer useful to their masters. They were ill-treated by their masters. When the four met together, they decided to go to Bremen-a place famous for its freedom where animals could live without owners. May be they could become musicians since they could not work.

They could not reach Bremen in one day. They decided to spend the night under a big tree in the forest. Both the cat and the rooster could climb trees, so they decided to sleep on the tree. Neither the donkey nor the dog could climb trees, so they decied to sleep under the tree. The rooster flew to the top of the tree where he was safer and looked around before he went to sleep. In the distance, he saw a little spark burning. When he told his friends what he had seen, the four decided to go there in the hope of finding some food and shelter.

When they reached the place, they saw a house. They saw through a window that there were some men sitting at a table eating and drinking. There was both food and gold on the table. The animals planned to perform for the men in the hope of getting somefood. The donkey placed himself with his forefeet upon the window ledge. The dog jumped on the donkey's back. The cat climbed upon the dog, and the rooster flew up and perched on the cat's head.

At a given signal they began to perform together. The donkey brayed, the dog barked, the cat mewed, and the rooster crowed. The men who were robbers thought that it was a ghost. They were extremely frightened and ran away. The four companions found both food and shelter and were very happy.

1. Why did the friends decide to leave their masters?
..........................................................................

2. What is Breman?
..........................................................................

3. What made the robbers run away?
..........................................................................

4. What does the word "himself" refer to?
..........................................................................

5. Find similar words to the following.
1. Colleaques :............................
2. evil :............................

**16. Write on any one of the following. Use about 200 words.**

1. You are seeking for a job. You have been asked to select one of the following as your job. Journalist, tourguide, self employment
What would you choose? Give your points.
- say why the job is important to you.
- say what you would choose
- say why you choose it
- give your points.

2. You have been invited to deliver a speech on "Dengue Eradication"
Include the following
1. Why dengue has become a term to be spoken
2. The factors edcouraging the dengue.
3. Impact of dengue.
4. Ways to eradicate dengue.

3. Complete the story
Once I went to a jungle with my friends Ramu and Somu. ....................
..................................................................
My mother woke me up and asked me 'why you shouted "mummy save me"
Then only, I realized that it was a dream.

ஒவ்வொருவருக்கும், ஒரு மாதத்தில் சுமார் முக்கால் அங்குல நீளம் தலைமுடி வளர்ச்சியடைகின்றது. ஆனால் தினமும் ஒரே மாதிரியான அளவில் முடி வளர்வதில்லை. தலை முடி ஒருவித இயைபின் போக்கில் வளர்கிறதாம். பொதுவாக இரவுநேரத்தில் தலைமுடி அதிகமாக வளர்வதாகக் கணக்கிட்டுள்ள



## தலைமுடி வளரும் நேரம்

னர். குறிப்பாக இரவு பத்துமணி முதல, பன்னிரெண்டு மணிக்குள்ளாக வேகமாக வளர்கிறது. அதன் பிறகு வேகம் குறைந்து விடுகின்றது. பொதுவாகவே முடியின் வளர்ச்சி வேகம் குறைவு தான். முடியின் வளர்ச்சியை நம் கண்ணால் காண முடியாத ஒன்றாகும்.

உடலில் உள்ள முடிகளெல்லாம் தனித்ததொரு வேர் உடையவை. இவை வெவ்வேறு அளவில் வளர்ச்சியடைகின்றன. சிலரின் முடிமென்மையாக இருக்கும்.

சிலரின் முடி சற்று முரடாக இருக்கும். முடி சற்று முரடாக உள்ளவர்கள் சற்று முன்கோபம் அதிகமாக உள்ளவர்களாக இருப்பார்களாம். நம் உடலில் உள்ள முடியும், நகங்களும் நாம் இறந்த பின்பும் சில நாட்கள் வரை வளரும் தன்மை பெற்றவையாகும்.

ஆண்களின் தலைமுடியின் வளர்ச்சியைக் காட்டிலும் பெண்களின் தலைமுடியின் வளர்ச்சியின் வேகம் அதிகமாகும். பெண்களுக்குத் தலை வழுக்கை ஏற்படுவதில்லை. ஆண்களுக்கு மட்டுமே வழுக்கை ஏற்படுகின்றது என்பது இயற்கை

## மொபைலின் பற்றரி திறனை உயர்த்தும் வழிமுறைகள்

மனிதனின் ஆறாவது விரலாக மாறிவிட்ட மொபைலின் உயிர்நாடி என்பது பற்றரி ஆகும் பற்றரியை நாம் சரிவர பராமரிக்காவிட்டால் பற்றரியின் ஆயுட்காலம் குறைந்து விரைவில் செயல் இழந்து விடும். பின்வரும் குறிப்புகளை பின் பற்றினால் உங்களின் பற்றரி நீண்ட நாளுக்கு பாதுகாப்பாக இருக்கும்.

புதிய மொபைல் வாங்கும்போதோ அல்லது புதிய பற்றரி வாங்கும் போதோ முதலில் 8 மணிநேரம் சார்ஜ் செய்வது மிகவும் அவசியம் 1 மணி அல்லது 2 மணியில் பற்றரி புல் என காட்டினாலும் சார்ஜ்செய்வதை நிறுத்தாதீர்கள் 8 மணிநேரம் முடிந்த பின்பே சார்ஜரை நீக்குங்கள் . முதல் சார்ஜிக்கு பிறகு எபபோது மொபைல் பற்றரி Low எனக் காட்டுகிறதோ அப்போது தான் சாரஜ்செய்ய ஆரம்பிக்கவேண்டும் ஒரு பாயின்ட் அல்லது இரண்டு பாயின்ட் குறைந்தாலோ உடனே சார்ஜ் செய்ய ஆரம் பிக்கக் கூடாது. உங்களது மொபைலின் பற்றரி mAh 1000 இற்கும் அதிகமான திறன் உடைய பற்றரியா என சோதித்து பார்த்து வாங்குங்கள் ஏன் எனில் ஆடியோ , வீடியோ, இணையவசதி உள்ள மல்ட்டிமீடியா மொபைலுக்கு mAh 1000 க்கும் அதிகமான திறன் உடைய பேட்டரி தேவை:


இரவு சார்ஜரில் போட்டுவிட்டு காலையில் எடுக்கும் வழக்கத்தை தயவு செய்து தவிர்த்து விடுங்கள் ஏன் எனில் நீங்கள் இப்படி சார்ஜ் செய்தால் உங்களது பற்றரி விரைவில் உப்பிவிடும் பின் பயன்படாமல் போகும். புளூடூத் வசதி , வை-பை வசதி மற்றும் இணைய வசதியை தேவைப்படும்போது மட்டும் பயன்படுத்துங்கள் மற்ற நேரங்களில் அணைத்து வையுங்கள் எப்போதும் திறந்தே வைத்திருந்தால் பற்றரியின் திறன் குறைந்து கொண்டே வரும்.

ரிங்ரோனுக்கு முழு பாட்டையும் வைக்காதீர்கள் "cut sonngs" எனப்படும் குறுகிய பாடல்களையே ரிங்டோனாக வையுங்கள் இதனால் பேட்டரியின் திறன் அதிகமாக செலவழிக்கப்படுவது தவிர்கப்படும் மொபைலை FM ரேடியா போல் எப்போதும் பாடல்களை பாட விடாதீர்கள். உங்களது மொபைலின் திரை வெளிச்சத்தை குறைத்து வையுங்கள் அனேகமாக அனைத்து மொபைல்களிலும் power safer mode இருக்கும் அதை activate செய்யுங்கள் இதனால் உங்களது பற்றரி நீண்ட காலத்திற்கு இருக்கும். வோல்பேப்பர் மற்றும் ஸ்கீரின்சேவர்களில் பிக்ஸ்ல்கள் அதிகமுடைய படங்களை வைக்காதீர்கள் இதனால் பற்றரி விரைவில் தீரும். அதிக வெப்பமுள்ள இடங்களில் மொபைலையோ பேட்டரியையோ வைக்காதீர்கள் இதனால் உங்களது பற்றரி திறன் குறையக்கூடும். கூடுமான வரையில் கம்பெனிகளின் ஒரிஜினல் பற்றரிகளையே வாங்குங்கள். அது போல கம்பெனிகளின் ஒரிஜினல் சார்ஜர்களையே பயன்படுத்துங்கள் இதனால் மின் விபத்துக்களை தவிர்கக முடியும்.

கணினி மூலை

காலையில் மரங்களும் செடி கொடிகளும் பனியில் நனைந்து ஈரமாகக் காணப்படும். இரவில் பனி பொழிந்ததால் மரங்கள் இவ்வாறு நனைந்திருக்கும். பனி பெய்வது எதனால் என்பது பலருக்குத் தெரியாது.


பூமியின் பரப்பில் நிகழும் உறைவித்தலால் பனி உருவாகிறது. சில சமயங்களில் இரவில் காற்றை விட பூமி அதிகமாகக் குளிர்ந்து விடுகிறது. காற்றில் உள்ள ஆவி, குளிர்ந்த தரைப் பரப்பில் உள்ள இலைகள்,



## இரவில் பனி ஏன்

தழைகள், பொருட்கள் ஆகியவற்றின் மீது விடியற்காலையில் படியும் போது, அது உறைந்து பனித் திவலையாக மாறுகிறது. பூமி மிகவும் குளிர்ந்து இருந்தால் ஈர ஆவி இறுகி உறை பனியாக மாறி விடுகிறது.

தரையில் இருந்து எழும் ஈர ஆவி, அதைவிட குளிர்ந்த இலையில் படுமானால், அது இறுகி வேறு வகை பனிப் படிவாக இருக்கும்.



பசி வந்தால் அனைவரும் வயிற்றைப் பிடித்துக் கொள்வர் ஆனால் வயிற்றுக்கும் பசிக்கும் தொடர்பு எதுவும் இல்லை. பசியை உண்டாககுவது மூளைதான். உடலுக்கு வேண்டிய

## பசிக்கும் வயிற்றுக்கும் தொடர்பா...?

ஊட்டப் பொருள்கள் இரத்தத்தில் குறைந்து விட்டன என்பதை உணர்த்துவதே பசி. இரத்தத்தில் குளுக்கோஸ், அமினோ அமிலங்கள், கொழுப்பு போன்ற பொருட்கள் அளவோடு இருக்கின்றவா என்பதை மூளை விழிப்புடன் கவனித்துக் கொண்டு இருக்கிறது. ஏதாவது குறைந்து விட்டால் அதை ஈடு செய்ய வேண்டும். அதற்கு உணவருந்த வேண்டும். அதனாலேயே பசிக்கிறது. பசிக்கும் போது சாப்பிடாவிட்டால் இரத்தம், உடலில் உள்ள புரதச்சத்தை உ யோகித்துக் கொள்ளத் தொடங்கும். அதன் காரணமாகவே உடல் இளைக்கிறது.

கண்ணீர் பெண்களின் ஆயுதம் என்பார்கள். பெண்ணின் கண்ணீருக்கு எவ்வளவு மோசமான ஆணும் கூட இளகி விடுவதுண்டு. நாம் நினைக்குமளவு பெண்ணின் கண்ணீர் அவ்வளவு சக்தி வாய்ந்ததா? இது குறித்து இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகள் குழுவொன்று ஆய்வு நடத்தியது. பெண்களின் கண்ணீரில் உள்ள இரசாயனப் பொருட்களினால் ஆண்களின் டெஸ் டொஸ் டெரோன்



## பெண்ணின் கண்ணீருக்கு சக்தி இருக்கிறதா?

எனும் ஹோர்மோன் குறையுமாம். இதனால் உடல் ரீதியான எழுச்சி குறையுமாம். கண்ணீரின் மூலமான தொடர்பாடல் குறித்தும் இந்த விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். வெங்காயம் உரிப்பதாலோ் வேறு காரணங்களாலோ வரும் கண்ணீரைவிட கவலையின் காரணமாக வரும் கண்ணீரில் விஞ்ஞான ரீதியான தொடர்பாடல் இடம்பெறுகிறது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஆண்களின் டெஸ்டொய்டெரோன் ஹோர்மோனுக்கும் வன்முறைக்குமிடையே தொடர்பு இருக்கிறது. பெண் ஒருவர் அழுவதன் மூலம் ஆணின் வன்முறைக் குணம் அதிகரிக்கிறதாம்.

இந்த ஆய்விற்காக பெண்கள் குழுவொன்றுக்கு 1979 ஆம் ஆண்டில் திரையிடப்பட்ட 'செம்ப' எனும் அமெரிக்க திரைப்படம் காண்பிக்கப்பட்டது. குத்துச்சண்டை வீரரான தனது தந்தையின் மரணத்தைத் தாங்காது சிறுவன் ஒருவன் தேம்பித் தேம்பி அளும் சோகமான காட்சியை அவர்கள் கண்டுகளித்தனர். இதனைப் பார்த்த பெண்கள் தாரை தாரையாக கண்ணீர் வடித்தனர். அந்தக் கண்ணீர்த்துளிகளைத் திரட்டிய விஞ்ஞானிகள் ஆண்களுக்கு அதன் வேதனையை அன்றி மணத்தை உணர வைத்தனர். இதற்காக சேலைன் நீர் கண்ணீரில் கலக்கப்பட்டது. சேலைன் மணத்தை விட கண்ணீரின் மணத்தை உணர்ந்த ஆண்கள், பெண்கள் குறித்து குறைவான ஈர்ப்பையே கொண்டனர். இதனூடாக கண்ணீர் விடும் பெண்களால் குறித்த ஆண்களுக்கு நல்ல அபிப்பிராயம் இருக்காதாம். இனிமேல் பெண்களின் கண்ணீருக்கு பெறுமதி இருக்காதா...?

தனக்கு ஏற்ற நண்பராக யாரைத் தேர்வு செய்யவேண்டும் என்பதை ஒருவரது மரபணு தான் தீர்மானிப்பதாக ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. மனிதர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட குண நலன்கள், தனிப்பட்ட பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ளனர். அவர்களின் குணநலன்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் ஒழுக்கம் சார்ந்த இயல்புகளை அவனது மரபணு தீர்மானிப்பதாக மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதேபோன்று, ஒருவர் தனக்கு ஏற்ற நண்பர்கள் யார் என்பதைத் தேர்வு செய்ய வேண்டும் என்பதை, அவரது மரபணுதான் தீர்மானிப்பதாக அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

## நண்பர்கள் தேர்ந்தெடுப்பதை தீர்மானிக்கும் மரபணு



மரபியல் பண்பு அல்லது மரபணு வகைகளின்படி, குறிப்பிட்ட ஆறு மரபணுக்கள், தங்களுக்கு ஏற்ற நண்பர் யார் என்பதைத் தீர்மானிப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இளம் வயதில், எதிர் பாலினத்தவரிடம் ஏற்படும் ஆர்வம் அல்லது இனக்கவர்ச்சியைப் போன்றும், இனம் இனத்தோடு சேரும் என்பது போன்றும் இந்த மரபணுக்கள், தங்களுக்கு ஏற்ற நண்பர்கள் இவர்தான் என்று அடையாளம் காணுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்

## அமெரிக்காவின் 50 ஆவது மாநிலம் எப்படி வந்தது?

அலாஸ்கா தீவு ரஷ்யாவுக்கு சொந்தமாகவே இருந்தது. ஆனால் அந்தத் தீவு ரஷ்யாவில் இருந்து தூரத்தில் அமைந்திருந்தது. பனிப்பிரதேசம் வேறு. தனக்குச் சொந்தமான அந்தத் தீவை நிர்வகிப்பது ரஷ்யாவுக்கு கொஞ்சம் தலைவலியாகவும் இருந்தது. இந்த நேரத்தில் அமெரிக்கா தன் நாட்டை 50 மாநிலங்களாகப் பிரித்து அதன் தேசியக் கொடியில் 50 நட்சத்திரங்களைப் பதிக்க நினைத்தது.

ஆனால் மாநிலங்களை 49 ஆகத்தான் பிரிக்க முடிந்தது இதற்கு என்ன செய்வது என அது யோசித்தது. ரஷ்யாவுக்கு சொந்தமான அலாஸ்கா தீவு கண்ணில் பட்டது. பனிப்பிரதேசமாக இருந்தாலும் பரவாயில்லை என்று வாங்கி அதை ஒரு மாநிலமாகச் சேர்த்துக் கொடியில் 50 நட்சத்திரங்களைப் பதிக்க அமெரிக்கா முடிவுசெய்தது.

ரஷ்யாவிடம் அலாஸ்காவை விலைக்குக் கேட்டது. பனிப்பிரதேசம் என்பதனால் அதனை நிர்வகிப்பது கஷ்டம் என்பதால் அலாஸ்காவை ரஷ்யா விற்பனை செய்ததாம். அதை வாங்கி பனியில் மீன் பிடிக்கும் சுற்றுலாத் தளமாக அமெரிக்கா மாற்ற முயற்சி பண்ணியது. அதன் போதுதான் கீழே எண்ணெய் ஆறு ஓடுவது தெரிந்ததாம். அமெரிக்காவுக்கு அதிர்ஷ்டம் கூரையைப் பியத்துக்கொண்டு வந்தது.

# தமிழகக் கட்சிகள் உதட்டளவில் மட்டுமே இலங்கை தமிழர் பிரச்சினைக்கு ஆதரவு

## விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவல்

(புதுடில்லி)


இலங்கைத் தமிழர்களுக்காக தமிழக அரசியல் கட்சிகள் உதட்டளவில் மட்டுமே ஆதரவைத் தெரிவித்தன என்று விக்கிலீக்ஸ் இணையத்தளம் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் பணியாற்றிய அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை மேற்கோள் காட்டி இந்தத் தகவலை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருக்கிறது.


இலங்கையில் இறுதிக்கட்ட போரின் போது தமிழக அரசியல் கட்சிகள் வெறும் வார்த்தைகளால் மட்டுமே தங்களது கண்டனத்தைத் தெரிவித்தன, இலங்கைத் தமிழர்களுக்காக அந்தக் கட்சிகள் தெரிவித்த ஆதரவும் உதட்டளவில் மட்டுமே இருந்தது என்று 2006 இல். இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதரக கான்சல ஜெனரலாகப் பணியாற்றிய டேவிட் ஹூப்பர் கூறியுள்ளார்.

2007 நவம்பர் 20 இல் இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதரகம் வொஷிங்டனுக்கு அனுப்பிய மற்றொரு தகவலில் தி.மு.க தலைவர் கருணாநிதி பற்றி குறிபபிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிப்பது தொடர்பான விவகாரத்தில் கருணாநிதி சாதுரியமான அணுகுமுறையைக் கடைப்பிடித்தார். கட்சித் தொண்டர்களையும், காங்கிரஸையும் சமாதானப் படுத்தும் வகையில் அவர் நடந்து கொண்டதாக அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.




இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான அவரது கோரிக்கைகள் வெறும் வார்த்தை ஜாலங்கள் மட்டுமே, அவர் உதட்டளவில் மட்டுமே பேசினார். இலங்கைத் தமிழர்களுக்குச் சாதகமாக கருணாநிதி பேசினாலும், அவர்களுக்காக மத்திய அரசை எவ்விதத்திலும் நிர்பந்திக்கவில்லை என்று வொஷிங்டனுக்கு அனுப்பிய தகவல்களில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் தங்கள் கருத்தைப் பதிவு செய்துள்ளனர்.



திருச்சி மாவட்ட தே.மு.க. அலுவலகத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களின் மனுப் பெறப்பட்டது. விருப்பு மனுக் கொடுக்க சாரட் வண்டியில் பந்தாவாகச் செல்லும் தே.மு.க. பிரமுகர் சோழநாடு சரவணன்

# இந்தியச் செய்திகள்

## இலங்கை மீனவர் 10 பேர் கைது

(சென்னை)

இந்தியக் கடல் எல்லைக்குள், அத்துமறிப் புகுந்த இலங்கை மீனவர்கள் 10 பேரை, கடலோரக் காவறபடையினர் கைது செய்தனர்.

இந்தியக் கடல் எல்லைக்குள், இலங்கை மீனவர்கள் அத்துமீறும் சம்பவங்கள் தொடர்ந்து வருகின்றன. ஆந்திர மாநிலம், கிருஷ்ணாம்பட்டினம் பகுதியில் கடலோரக் காவற்படையினர் ரோந்து சென்ற போது, இரண்டு விசைப்படகுகளில், 10 இலங்கை மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களைக் கடலோரக் காவற் படையினர் சுற்றி வளைத்தனர். பத்துப் பேரும், கடல் மார்க்கத்தில் சென்னை நோக்கிக் கொண்டுவரப்பட்டு, நேற்றுக் காலை சென்னைத் துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என, கடலோரக் காவற்படையினர் தெரிவித்தனர். இரண்டு விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் மாறனின் பங்கு சி.பி.ஐ.நேர்மையாக செயற்படவில்லை

### உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல்



(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழலில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறனுக்கு எதிராக மத்திய புலனாய்வுத்துறை நேர்மையான முறையில் விசாரணை நடத்தப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டி உச்ச நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் மாறனின் பங்கு குறித்த முக்கிய உண்மைகளை சி.பி.ஐ. கவனத்தில் கொள்ளவில்லை என பூஷண் தாக்கல் செய் துள்ள மனுவில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

செப்ரெம்பர் முதலாம் திகதி உச்சநீதிமன்றத்தில் சி.பி.ஐ. தாக்கல் செய்த மனுவில், ஏர்செல் நிறுவனத்தை மலேசிய நிறுவனத்துக்கு விற்குமாறு தயாநிதி மாறன் மிரட்டியதாகக் கூறப்படுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை எனத் தெரிவித்திருந்தது. மேலும் 2001-2007 ஆம் ஆண்டு காலத்தில் தொலைத்தொடர்பு உரிமங்கள் வழங்கப்பட்டதில் நிர்ப்பந்தங்கள் இருந்ததற்கான முகாந்திரம் இல்லை என்று தயாநிதி மாறனுக்கு சி.பி.ஐ. நற்சான்றிதழ் அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைதான கனிமொழி மிக விரைவில் விடுதலை செய்யப்படுவார்?



(சென்னை)

ஸ்பெக்ரம் வழக்கில் கைதான கனிமொழி பிணையில் செல்வதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும், இதனால் அவர் விடுதலை செய்யப்படலாமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, கனிமொழி எம்.பி., கலைஞர் ரி.வி நிர்வாக இயக்குநர் சரத்குமார் உட்பட 15 பேர் கைது செய்யப்பட்டு, டில்லி திகார சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு தொடர்பான விசாரணை டில்லியில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இந்த நிலையில் சி.பி.ஐ. 3 ஆவது குற்றப் பத்திரிகையை அடுத்த வாரம் தாக்கல் செய்யவுள்ளது. இதற்கிடையே ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான விசாரணை விரைவில் முடிவுக்கு வரவுள்ளது. இந்த விசாரணை முடிந்து விட்டால், சிறையில் அடைக்கப்பட்டு இருப்பவர்கள் பிணை கோரி மனுத் தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திகார் சிறையில் 100 நாட்களுக்கும் மேலாக இருந்து வரும கனிமொழி, சிறப்பு நீதிமன்ற விசாரணை முடிந்ததும், தன்னை பிணையில் விடுதலை செய்யக் கோரி மனுச் செய்வார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

சி.பி.ஐ. தரப்பில் இதற்கு எதிர்ப்பு இருக்காது என்று தெரிகிறது. எனவே கனிமொழி பிணையில் விடுதலையாகி வெளியில் வர வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது. அனேகமாக இன்னும் 2 வாரங்கள் கழித்து அவர் விடுதலை ஆவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## காலணி வாங்க மும்பைக்கு விமானம் அனுப்பிய மாயாவதி




(மும்பை)

புதிதாகக் காலணி வாங்க வேண்டுமானால் தனது ஜெட் விமானத்தை மும்பைக்கு அனுப்பி விருப்பப்பட்டவற்றை மாயாவதி வாங்கிக் கொள்வார் என விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் உணவில் விஷம் கலக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காகவே 9 சமையற்காரர்கள் மற்றும் 2 சுவை அறிபவர்களை பணிக்கு அமர்த்தியுள்ளார்.

இத்தகவல் ஒக்ரோபர் 23, 2008 திகதியில் பதிவாகியுள்ளது. அதே போன்று ஒவ்வொரு வருடமும் தனது பிறந்த நாளின போது கட்சி உறுப்பினர்கள், அரசு துறை ஊழியர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோரிடமிருந்து கோடிக்கணக்கில் பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வது வழக்கம் என்ற தகவலையும் வெளியிட்டுள்ளது.

# 2009ஆம் ஆண்டில் மன்மோகனுக்குப் பதிலாக சோனியா பிரதமராவதை விரும்பிய தி.மு.க.





(புதுடில்லி)

கடந்த 2009ஆம் ஆண்டில் மன்மோகன் சிங்கிற்குப் பதிலாக, சோனியா பிரதமராக வேண்டும் என, தி.மு.க. விரும்பியது என்று விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத்தளத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த 2008 ஆம் ஆண்டு ஜூனில் அமெரிக்கத் துணைத் தூதரக அதிகாரி டென்னிஸ் டி.ஹூப்பருடன் பேசிய தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு நெருக்கமான சிவபிரகாசம் என்பவர், காங்கிரஸ் கட்சியின் உள்விவகாரத்தில் தி.மு.க. ஒரு போதும் தலையிடாது. இருந்தாலும் 2009ஆம் ஆண்டில் மன்மோகன் சிங்கை விட, சோனியாவே பிரதமராக வேண்டும் என்பதே தி.மு.க.வின் விருப்பம். சோனியா பிரதமராக வேண்டும் என்பதையே தமிழக மக்களும் விரும்புகின்றனர்.

அதே நேரத்தில், பிரதமர் பதவியை ஏற்க காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுலும் விரும்பவில்லை. கட்சியின் மூத்த தலைவரான பிரணாப் முகர்ஜி, பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவர் என்றாலும், அவர் பிரதமராக வேண்டும் என, வடமாநிலத்தவர் வேண்டுமானால் விரும்பலாம் தென்மாநில மக்கள் அவரை விரும்பமாட்டார்கள் என்று கூறியுள்ளார்.

மேலும், தி.மு.க. தலைவர் கருணாநிதியை சென்னையில் ஒரு காலகட்டத்தில் சந்தித்த மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங்கும், தான் பிரதமராக தி.மு.க. ஆதரவுதர வேண்டும் என்றும் கோரியுள்ளார் என்று அந்த இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூக்குத் தண்டனையை நிறைவேற்றுமாறு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி வீதி மறியல்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. இந்தத் தண்டனையை உடனடியாக நிறைவேற்றக் கோரி தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸார் நடத்திய வீதி மறியல் போராட்டத்தால் மெரீனா கடற்கரை, காமராஜர் வீதியில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

கடற்கரை, காமராஜர் வீதியில் உள்ள காந்தி சிலை முன்பு நேற்றுக் காலை இளைஞர் காங்கிரஸார் திரண்டனர். பின்னர் அவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ராஜீவ் கொலையாளிகளை உடனடியாகத் தூக்கில் போட வேண்டும். அவர்களுக்குத் தண்டனையைக் குறைக்கக் கூடாது. கருணை காட்டக்கூடாது என்று கோரி அவர்கள் கோஷமிட்டனர். இவர்களது போராட்டத்தால் காமராஜர் வீதியில் கடும் போக்குவரத்துப் பாதிப்பு ஏற்பட்டது.

உலகச் செய்திகள்

### ஆபிரிக்காவின் சோமாலியாவில்

# ஏழரை இலட்சம் பேர் சாவின் பிடியில் உடன் உதவுமாறு கோருகிறது ஐ.நா

ஆபிரிக்காவின் சோமாலியா வில் ஏழரை இலட்சம் பேர் சாவின விளம்பில் உள்ளனர். 40 லட்சம் மக்கள் உலக நாடுகளின் உதவி களை எதிர்பார்த்துக் காத்திருக் கின்றனர் என ஐ.நா தெரிவித் துள்ளது.

ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள எத்தியோப் பியா, சோமாலியா மற்றும் கென்யா ஆகிய மூன்று நாடுக ளில் வரலாறு காணாத பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

இவற்றில் சோமாலியாவில் 1991 இலிருந்து நிலையான அரசியல் சூழல் இல்லை. நாட் டின் பெரும்பான்மையான தெற் குப் பகுதி அல் 'பாப் பயங்கர வாத அமைப்பிடம் சிக்கியுள்ளது.

பிற பகுதிகள் பல்வேறு இனக் குழுக்களிடம் உள்ளன. தலைநகர் மொகாடிஷுவும் வேறு ஒரு சில பகுதிகளும் மட்டுமே அரசு வசம் உள்ளன.

இந்நிலையில் ஐ.நா.வின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊடடச்சத்து உணவு ஆராய்ச் சிக்கான அமைப்பு (எஸ்.எஸ். என்.ஏ.யு) வெளியிட்டுள்ள அறிக்கையில் இது குறித்து கூறப்பட்டிருப்பதாவது: சோமாலி யா வில் மொத்தம் 40 லட்சம்



பேர் பஞ்சத்தால் பாதிக் கப்பட் டுள்ளனர். அவர்களுக்கு உட னடியாக உணவுப் பொருட்கள் தேவைப்படுகின்றன.

பஞ்சம் நீடிக்கும் பட்சத்தில் இன்னும் சில மாதங்களில் ஏழரை இலட்சம் பேர் இறந்து விடுவர். ஏற்கனவே ஆயிரக் கணக்கான குழந்தைகள் உட்பட பலர் பட்டினியால் இறந்து விட்டனர்.

இந்த 40 இலட்சம் பேரில் 30 லட்சம் பேர் நாட்டின் தென் பகுதியில் தான் உள்ளனர். ஒட்டு மொத்தமாக கிழக்கு ஆபி ரிக்காவில் மட்டும் 1 கோடியே 20 இலட்சம் மக்களுக்கு உணவு தேவைப்படுகிறது.

கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்தாண்டு மழையே இல்லாததால் சோமா லியா, எத்தியோப்பியா, கென்யா ஆகிய நாடுகள் பஞ்சத்தால் பெருமளவு பாதிக்கப்பட் டுள்ளன. இவற்றோடு ஜிபவுட்டி, எரித்ரியா மற்றும் உகாண்டா நாடுகளிலும் மழையின்மையால் பஞ்சம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கியூப பாதுகாப்பு அமைச்சர் மாரடைப்பால் மரணமானர்

கியூபாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜூலியோ காசாஸ் ருகேரோ மாரடைப்புக் காரணமாக தனது 75 ஆவது வயதில் உயிரிழந் துள்ளார். ஜனாதிபதி ராஉஹல் கஸ்ரோவினால் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டதன் பின்னர் இராணுவப் பொருளாதார செயற்பாடு களில் அவர் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது

காசாஸ் ருகேரோவின் உயிரிழப்பினை அடுத்து கியூபாவில் மூன்று நாள் துக்க தினத்தினை அந்த நாட்டு அரசாங்கம் பிரகட னப்படுத்தியுள்ளது.

காசாஸ் ருகேரோ கணக்காளராகப் பயிற்சி பெற்ற போதிலும், 1950 ஆம் ஆண்டு பிடெல் கஸ்ரோவின் கிளர்ச்சி இராணுவத்தில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் நிலநடுக்கம்

(ஜகார்த்தா)

இந்தேனேசியாவின் சுமத்ரா தீவில் நேற்று அதிகாலையில் பலத்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்தோனேசியாவின் மேற்கு பகுதியில் உள்ள சுமத்ரா தீவில் நேற்றுக்காலை 12.55 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. 52 கி.மீ ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 6.6 ரிக்டர் என பதிவானது.

பந்தா அசே பகுதிக்கு தென்மேற்கில் 400 கி.மீ சுற்றளாவில் அதன் பாதிப்பு இருந்தது. ஆனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. இந்த இயற்கை சீற்றத்தில் 12 வயது சிறுவன் ஒருவன் பலியானதாக தகவல் கிடைத்துள்ளது. இந்தோனேசியாவில் நிலநடுக்கம் அவ்வப்பே?து ஏற்படும் என்ப தால் சிறிது நேரம் பரபரப்படைந்த மக்கள் தங்கள் பணிகளை தொடர்ந்தனர்.



பின்லாந்து தலைநகர் ஜெல்சிங்கியில் நடந்துவரும் அரசின் பணிகளைப் பார்வையிட வந்த ஐரோப்பியன் கமிட்டி கவுன்சிலர் ஹெர்மன் வான் ராம்பேக்கு, அந்நாட்டு பிரதமர் ஜிர்கி கடய்நென் சுற்றிக்காட்டுவதைக் காணலாம்.

# அரிசியை ஏற்றுமதி செய்து ஆயுதம் வாங்கிய மியான்மார்

(ரங்கூன்)

மியான்மர் அரசு வட கொரி யாவுக்கு அரிசி ஏற்றுமதி செய்து விட்டு அதற்கு ஈடாக ஆயுதங்கள் பெற்றதாக விக்கி லீக்ஸ் ரகசிய ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் சமீபத்தில் தன்வசம் இருந்த இரண டரை இலட்சம் அமெரிக்க வெளி யுறவு இரகசிய ஆவணங்களை வெளியிட்டது.

அவற்றில் கடந்த 2009 யூலையில் மியான்மரின் யாங் கூன் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து வொஷிங் டனுக்கு அனுப்பப்பட்ட செய்தி ஒன்றில் கூறப்பட்டிருந்ததாவது: மியான்மர் இராணுவ அரசு தனக்குச் சொந்தமான "மியான் மர் எக்கனமிக் ஹோல்டிங்ஸ்" நிறுவனம் மூலம் 20 ஆயிரம் தொன் அரிசியை வடகொரி யாவுக்கு ஏற்றுமதி செய்தது.

அரிசி தவிர விவசாயப் பொருட்களையும் வடகொரியா வுக்கு கடந்த ஐந்து ஆண்டுக ளாக ஏற்றுமதி செய்து வருகி றது. ஏற்றுமதி செய்யப்படும் அரிசிக்கு ஈடாக வடகொரியா விடமிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்து கொள் கிறது.

கடந்தாண்டில் விக்கிலீக்ஸ் வெளியிட்ட இரகசிய ஆவணங்க ளின்படி மியான்மர் பல ஆண்டு களாக அணு ஆயுதத் தயாரிப் பில் ஈடுபட்டிருப்பதாக அமெ ரிக்கா சந்தேகம் கொண்டிருந் தது.

மேலும் ஐ.நா வெளியிட்ட அறிக்கையின்படி ஈரான், சிரியா மற்றும் மியான்மருக்கு வட கொரியா அணு ஆயுத ஏவுகணை களை வழங்கத் தடை விதிக்கப் பட்டது. வடகொரியா உடனான அணு ஆயுதப் பரிமாற்றம் பற்றிய தகவலை மியான்மர் ஏற்கனவே மறுத்து விட்டது குறிப்பிடத்தக்கது.

# கடாபியின் மகன்கள், முக்கிய பிரமுகர்கள் நைஜர் எல்லையூடாகத் தப்பியோட்டம்

(திரிபோலி)

பானி வாலித் நகரத்திலி ருந்து கடாபியின் இரண்டு மகன் களும் மற்றும் முக்கிய பிரமுகர் களும் நைகர் நாட்டிற்குத் தப் பிசசென்றுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

நைஜர் படையினரின் பாது காப்புக்கு மத்தியில் இவர்கள், நைஜரின் வட பிராந்தியத்துக் குள் பிரவேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

200 தொடக்கம் 250 இற்கும் அதிகமான இராணுவ வாகனங் கள் மூலம் முக்கிய பிரமுகர்கள் பலர் நைகருக்குத் தப்பிச் சென் றுள்ளனர்.

லிபியாவின் நிர்வாகம் கிளர்ச சியாளர்களின் கைககளுக்கு வந துள்ள நிலையில், சில பகுதிக ளில் தொடர்ந்தும் கடாபிக்கு எதிரான தாக்குதல்கள் நடத்தப் பட்டு வருகின்றன.

எனினும் கடாபி எங்கிருக் கின்றார் என்பது தொடர்பில் உறுதியான தகவல் கள் எதுவும் இதுவரை வெளி யாகவில்லை இதேவேளை லிபிய அரசாங் கத்திற்கு சீனா ஆயுதங்கள் வழங்கியுள்ளமை குறித்து ஆதாரபூர்வமான தகவல்கள் வெளியாகியுள்ளதாக லிபியா வின் புதிய தலைமைத்துவம் தெரிவித்துள்ளது.

இந்த ஆயுதங்கள் அல்ஜீரியா வின் ஊடாகவே வழங்கப்பட் டுள்ளதாக கிளர்ச்சியாளர்களின் தேசிய மாற்றத்துக்கான பேரவை அறிவித்துள்ளது.

அத்துடன் ஐரோப்பிய நாடு கள் சிலவும் கடாபியின் அரசாங்கத்துக்கு இந்த வரு டத்தில் ஆயுதங்களை விநி யோகித்துள்ளதாகவும் கிளர்ச்சி யாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

லிபியாவில் கடந்த ஆறு மாதங்களாக நடைபெற்றுவரும் மோதல்களில் அரசாங்கப் படை யினருக்குப் பல்வேறு விதமான உதவிகளை அல்ஜீரியா வழங்கி யுள்ளதாகவும் கிளர்ச்சியாளர் கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

லிபியத் தலைநகர் ட்ரிப் போலியிலிருந்து கைப்பற்றப் பட்ட அரசாங்கத்தின் முக்கிய ஆவணங்களிலிருந்து இந்த விடயங்கள் தெரியவந்துள் ளன.

# உலக பொருளாதார ஆபத்தை தவிர்க்க ஏற்றுமதியை சீனா கைவிட வேண்டும்

## உலக வங்கித் தலைவர் அறிவுறுத்து




(பீஜிங்)

உலக பொருளாதாரம் ஆபத்தை எதிர்கொள்ளும் நிலை ஏற்படந்துள்ளது. அதைத் தவிர்க்க ஏற்றுமதி மீதான கவனத்தை சீனா கைவிட்டு, உள்நாட்டு நுகர்வு அடிப்படையி லான வளர்ச்சியில் அக்கறை காட்ட வேண்டும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் தலைவர் ரொபேர்ட் ஜோலிக் இப்போது சீனாவல் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளார். தலைநகர் பீஜிங்கில் அவர் தெரிவித்ததாக சீனா டெய்லி நாளேடு வெளி யிட்ட செய்தியில் கூறியதாவது,

அடுத்த சில மாதங்களுக்கு சர்வதேச பொருளாதாரம் ஆபத் தான கட்டத்தை எதிர்நோக்கி யுள்ளது. அது சீனாவுக்கும் பொருந்தும். அதிக உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை நோக்கியே சீன பொருளாதாரம் இப்போது செயற்படுகிறது. உள் நாட்டு நுகர்வை அதிகரிக்கும் வகையில் அடிப்படைக் கட்ட மைப்பில் சீர்திருத்தங்களை சீன அரசு செய்யவேண்டும்.

அப்போதுதான் சர்வதேச பொருளாதார சமனற்ற நிலையை உலக நாடுகளும், சீனாவும் சமாளிக்க முடியும். 2010 ஆம் ஆண்டு மே மாதத்துக்கு பிறகு மிகக்குறைந்த அளவை ஐரோப் பிய மண்டலத்தில் நுகர்வோர் நம்பிக்கை மற்றும் வர்த்தக புள்ளிகள் அடைந்துள்ளன. அமெ ரிக்க உள்நாட்டு உற்பத்தி 1.7 முதல் 2.1 சதவீதமாக இருக்கும் என்று வெள்ளை மாளிகை அறிக்கை தெரிவிக்கிறது. இவை மந்தமான பொருளாதார நிலையை வெளிப்படுத்துகின் றன என அதில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# மரக்கறிகளின் விலையை அறிய விசேட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

வர்த்தகச் சந்தையில் மரக்கறி வகைகளின் மொத்த விலைகள் தொடர்பான தகவல்களை நாளாந்தம் அறிந்துகொள்ளக்கூடிய வகையிலான விசேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக விவசாயிகள் மற்றும் நுகர்வோர் மரக்கறி வகைகளின் நாளாந்த விலைகளை அறிந்துகொண்டு விற்பனை மற்றும் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக 23 மரக்கறி வகைகளின் விலைகளை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் பணிப்பாளர் லலித் காந்த ஜயசேகர குறிப்பிட்டார்.

புறக்கோட்டை,கண்டி,மீகொடை, நுவரெலியா,தம்புள்ளை,நுரைச்சோலை மற்றும் கெப்பிட்டிபொல ஆகிய சந்தைகளில் மரக்கறிகளின் மொத்த விலைகளை அறிந்து கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார்.

இதன்படி போஞ்சி,கரட்,கத்திரிக்காய்,பூசணிக்காய்,வாழைக்காய்,லீக்ட்ஸ், பீட்றூட்,கோவா, வாழைக்காய் மற்றும் தேசிக்காய் உள்ளிட்ட 23 மரக்கறி வகைகளின் விலைகளை இந்த விசேட தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அறிந்து கொள்ள முடியுமென ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவிக்கின்றது.

# அரசசார்பற்ற நிறுவனங்கள் இலங்கைக்கு அழுத்தம்

## என்கிறது திவயின

(கொழும்பு)

உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற 46 நிறுவனங்களைச் சேர்ந்த 262 நபர்கள் இலங்கைக்கு எதிராக ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் அழுத்தங்களைக் கொடுக்கவிருப்பதாக அரசாங்கத்திற்கு தெரியவந்திருப்பதாக திவயின தெரிவித்துள்ளது.

இந்த அரசசார்பற்ற நிறுவனங்களில் 95 வீதமானவை மேற்குலக நாடுகளில் இயங்கி வருகின்றன. இவற்றின் இலங்கை முகவர்கள் யார் என்பதையும் அரசாங்கம் கண்டறிந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்த நிறுவனங்களில் ஒன்றுக்கு வெளிநாடொன்றில் இருந்து 200 மில்லியன் ரூபா நிதி கிடைத்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு பெரும்பான்மையினர் மதிப்பளிப்பதில்லை

## பேராயர் நோபட் அந்திராதி கவலை

(கொழும்பு)

சிறுபான்மை மக்களின் உரிமைகள் உரிய வகையில் மதிக்கப்படுவதில்லை என பேராயார் நோபட் அந்திராதி தெரிவித்துள்ளார்.

மூன்று தசாப்தமாக நீடித்து வந்த யுத்தம் நிறைவடைந்த போதிலும், பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதனை உணர்ந்துகொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக பல்மொழி, பல்மத மற்றும் பல் கலாசார ரீதியான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதனை பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொள்ள தயக்கம் காட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால அனுபவங்களிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். மாற்றுக் கொள்கைகளுக்கு வரவேற்பளிக்கும் மனப்பாங்கு மருவி வருவதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

அரசியல்வாதிகள் சட்டம் ஒழுங்கை கையில் எடுத்துக் கொள்ள முயற்சிப்பதாகவும் இதற்கு இடமளிக்கப்படக் கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## விசேட கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் கல்விச் சுற்றுலா ஒன்றினை இன்று காலை யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கவுள்ளனர்.

12 வலயங்களில் இருந்தும் விசேட கல்வி ஆசிரியர்களும்,ஆலோசகர்களும் கல்விக் கற்பித்தலை மேம்படுத்தும் நோக்கத்துடன் மேல் மாகாணம், தென் மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இக் கல்விச் சுற்றுலாவை மேற்கொள்ளவுள்ளதாக மாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எஸ்)

## வீதித் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

பல வருடங்களாகத் திருத்தப்படாமல் இருந்த காட்டுக்கந்தோர் பின் வீதி தற்போது திருத்தப்பட்டுள்ளது.

பல வருடங்களாக திருத்தப்படாமல் பாவனையற்றுக் கிடந்த இந்த வீதி, தற்போது யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் கிளை நிறுவனம் இந்தப் பகுதியில் திறக்கப்பட்டதையடுத்து இந்த வீதி திருத்தப்பட்டுள்ளது. (21)

# பல்வேறு வர்த்தகப் பெயர்களில் மருந்துகள் பதிவதால் பிரச்சினை

(கொழும்பு)

பல்வேறு வர்த்தகப் பெயர்களில் மருந்துப் பொருட்கள் பதிவு செய்யப்படுகின்றமையால் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் பல்வேறு வர்த்தகப் பெயர்களைக் கொண்ட சுமார் 40 ஆயிரம் மருந்துப் பொருட்கள் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

சில மருந்துவகைகள் சுமார் 50 வர்த்தகப் பெயர்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவிக்கின்றது.

எனினும், .இலங்கைக்கு மூவாயிரம் மருந்து வகைகளே தேவையென அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள தேசிய ஔடதங்கள் சட்டத்தின் ஊடாக இந்த நிலைமைக்கு தீர்வு காண்பதற்கு சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

## கூட்டம்

(கொழும்பு)

யாழ்.வலயக் கல்வி பாடசாலைகளைச் சேர்ந்த விசேட கல்விப் பொறுப்பாசிரியர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு யாழ்.வலய கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் விசேட தேவைகளை உடைய மாணவர்களுக்கான வலயம்,மாகாணம்,தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே உரிய ஆசிரியர்கள் தவறாது இக் கூட்டத்தில் பங்கு கொள்ளுமாறு யாழ்வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராசலிங்கம் அறிவத்துள்ளார். (எஸ்)

# இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் பெருமளவிலான மோசடிச் செயற்பாடுகள்

## கணக்காய்வாளர் நாயக அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சீபெட்கோ) குறித்து, பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு (கோப்) கணக்காய்வாளர் நாயகம் அனுப்பி யுள்ள அறிக்கையில் சீபெட்கோவின் உயர் நிர்வாகத்தினால் மேற்கொள்ளப் பட்ட தவறான நிதிக் கையாளல்கள்,பொய்யான வரிப்பிரகடனங்கள்,சட்டத்தரணிகளுக்கும் விளம்பரங்களுக்கும் செலுத்தப்பட்ட மிகையான பணம் முதலான அதிர்ச்சிகரமான மோசடிகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதியளவு அரச நிறுவனமான சீபெட்கோ கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கணக்காய்வாளர் நாயகத்தின் 2009ஆம் ஆண்டுக்கான இந்த அறிக்கை அமைச்சர் டியூ குணசேகரவை தலைவராகக் கொண்ட கோப் குழுவினால் ஆராயப்படுகிறது.

அவ்வறிக்கையின்படி 67 மில்லியன் ரூபா பெறமதியான சப்புகஸ்கந்த மினி டேர்மினல் காணிக்கான பத்திரத்தை சமர்ப்பிக்க சீபெட்கோ தவறியுள்ளது. 55.5 மில்லியன் ரூபா முதலீட்டு இருப்பு மற்றும் முதலீட்டை மீளப்பெறும் தன்மை என்பனவற்றை போதிய சான்றுகள் இன்மையால் உறுதிப்படுத்த முடியவில்லை. முத்துராஜவெலவியல் 259 மில்லியன் ரூபா பெறுமதியான 5 ஏக்கர் நிலமானது சீபெட்கோவின் சொத்துக்களில் ஒன்றாக கணக்குப் பேரேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அக்காணி சீபெட்கோவுக்குச் சொந்தமானது என்பதை உறுதிப்படுத்துவற்கான ஆவணம் இல்லை என்பன கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சில விடயங்களாகும்.

31.12.2002 ஆம் திகதிக்கு முற்பட்ட சொத்துக்களுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் இதனால் அச் சொத்துகளின் உரித்துடைமையை கணக்குத் தணிக்கை அறிக்கையில் உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி அதிக கட்டணத்திற்கு சட்டத்தரணிகள் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் குறித்த வருடத்தில் சட்டத்தரணிகளுக்கு 5மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்களின் வருமான வரி, சுற்று நிருபங்களுக்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் சொந்த நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. 2000 முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இவ்வாறு செலுத்தப்பட்ட வருமான வரி 777 மில்லியன் ரூபாவாகும். மோட்டார் வாகனங்கள் பெற உரித்துடையவர்கள் அல்லாத உத்தியோகஸ்தர்களுக்கும் சபைப் பணிப்பாளர்கள், தலைவர் ஆகியோரின் அங்கீகாரத்துடன் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தகைய 8 உத்தியோகஸ்தர்களுக்கு 2009 ஆம் ஆண்டு எரிபொருள் மற்றும் பயணக் கொடுப்பனவாக 18 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நோய்த்தொற்று விடயத்தில் இலங்கைக்கு முதலிடம்

(கொழும்பு)

தொற்று நோய்கள், தொற்று அல்லாத நோய்கள் மற்றும் காயங்கள் என்பவை தொடர்பில் இலங்கை முதலிடத்தில் உள்ளதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. இந்த அதிகரிப்பு அபிவிருத்தி அடைந்த நாடுகளைக் காட்டிலும் 20 முதல் 50 வீதம் வரை இலங்கையில் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதய சம்பந்தப்பட்ட நோய்கள், ஆஸ்மா என்ற தொய்வு போன்ற நோய்கள் காரணமாக 2004 ஆம் ஆண்டுகளில் 29.6 வீத இறப்புக்களே ஏற்பட்டன. எனினும் 2008ஆம் ஆண்டில் அது 65.4 வீதமாக அதிகரித்தது.

அத்துடன் இலங்கையில் சிறுவர்கள் மத்தியில் மந்தபோசனை மட்டமும் அதிகரித்து வருகிறது. இந்தநிலையில் பொதுமக்கள் மத்தியில் தெளிவின்மை காரணமாக வயதாவதற்கு முன்னரே மரணங்கள் சம்பவிக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்களை இலங்கை சுகாதாரக் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி தலதா லியனஹே வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, கிராம மக்களும் நகரங்களுக்கு இடம்பெயர்ந்து நகர உணவு வழக்கங்களுக்கு உட்பட்டுள்ளமையானது, நோய்களுக்கான காரணிகளாக அமைந்துள்ளன என்று சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜப்பானில் ஆய்வாளர்கள் சிலர் இலங்கையில் வந்து நடத்திய ஆய்வின் போது, இலங்கையர்கள் அதிகளவு உப்பை உட்கொள்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலகுவாகக் கிடைக்கும் மரக்கறிகள்,பழங்கள் மற்றும் மீன்களை இலங்கையர்கள் அதிகளவில் உட்கொள்வதில்லை என்றும் ஜப்பானிய ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். 2040 ஆம் ஆண்டில் இளைஞர் சனத் தொகையைக் காட்டிலும் முதியோரின் சனத்தொகை அதிகரிக்கும் என்ற தகவலையும் பாலித மஹிபால குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கின் வசந்தம் பூநகரியில் துரிதம்

(முழங்காவில்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பூநகரிப் பிரதேசத்தில் பல திணைக்கள கட்டடங்களின் வேலைகள் துரிதகதியில் இடம் பெற்றுவருவதுடன், சில கட்டட வேலைகள் முடிவுற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி பூநகரி கால்நடை சுகாதாரத் திணைக்கள அலுவலகம், பிரதேச சபை அலுவலகம், ப.நோ.கூட்டுறவுச் சங்க அலுவலகம் ஆகியவற்றின் வேலைகள் முடிவடைந்துள்ளன.

பூநகரி தபால் நிலையம், பிரதேசசபை நூலகம், சந்தைத் தொகுதி, அரசினர் வைத்திய சாலை ஆகியவற்றின் கட்டட வேலைகள் துரிதகதியில் நடை பெற்று வருகின்றன.

கட்டட வேலைகள் முடிவுற்ற அலுவலகங்கள் விரைவில் விரைவில் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (112)

# குற்றவாளி ஆஜராகாததால் பிணையாளிக்கு அபராதம் விதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதி மன்றினால் குற்றமொன்றிற்காக 2 இலட்சம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட ஒருவர் வழக்குத் தொடர்பாக மன்றிற்கு சமுகமளிக்காததால் குறித்த நீதிமன்றம் அவரது பிணையாளிக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குற்றவாளியின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது குறித்த குற்றவாளி மன்றில் ஆஜராகாததையடுத்து பிணையாளியை பொலிஸார் மன்றில் ஆஜர்படுத்தினர்.

இதனையடுத்து மாவட்ட நீதிபதி கே.சிவகுமார் குறித்த பிணையாளிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்துமாறு உத்தரவிட்டார். (கே)

# பண்ணையில் தொழில் திணைக்களம் விரைவில் அடிக்கல் நாட்டப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் திணைக்களத்திற்கு பண்ணையில் 3 மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்த 3 மாடிக் கட்டடத்திற்கான ஆரம்ப அடிக்கல் நடும் வைபவம் விரைவில் இடம்பெறவுள்ளது. தொழில் திணைக்களத்திற்கு அமையவிருக்கும் இந்த புதிய கட்டடத் தொகுதியில் யாழ். உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகம், வடமாகாண தொழில் ஆணையாளர் அலுவலகம் மற்றும் வேலைப்பகுதி பிரிவு போன்றவை செயற்படவுள்ளது.

இந்தப் புதிய கட்டடத்திற்கான நிதியும் தொழில் அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டட வசதியின்றி இந்த அலுவலகம் வீரசிங்கம் மண்டபத்திலேயே கடந்த பல வருடங்களாக செயற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

# மாற்று ஆற்றலுடையோரின் சட்ட உரிமைகள் என்ன?

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வாழ்வகம் நிறுவனத்தில் நிறுவுநர் நினைவு நாள் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'மாற்று ஆற்றலுடையோரின் சட்ட உரிமைகள்' என்னும் தலைப்பில் திருமதி லிங்கா துரைராசா நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார்.

எனவே ஆர்வம் உடையவர்கள் கலந்துகொள்ளமுடியும். மேற்படி நிறுவனம் சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

# கிராமிய விழிப்புக்குழு நடவடிக்கை துரிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மர்மனிதனின் நடமாட்டம் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக விழிப்புக் குழுக்கள் அமைக்கும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

குடாநாட்டின் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் இந்த விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்படவுள்ளது. இளைஞர்கள் மற்றும் வயதுவந்தோர் இக்குழுவில் இடம் பெற்று இரவு நேரங்களில் தமது கிராம பாதுகாப்பை மேற்கொள்ளவுள்ளனர்.

இதேசமயம் குடாநாட்டின் அநேகமான இடங்களில் பொலிஸாரின் உதவியுடன் இரவில் இளைஞர் குழுவினர் விழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விழிப்பு நடவடிக்கைக்கு கிராம மக்கள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர். (வி)

# பொதுமக்களின் காணிகளை கடற்படை சுவீகரித்தது

## உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு

(காரைநகர்)

காரைநகரின் எலாரா கடற்படை முகாம் 1998 ஆம் ஆண்டு மே மாதம் அதன் சுற்றுவட்டத்தில் அமைத்திருந்த பொது மக்களின் கட்டடங்களும் காணிகளும் கடற்படை முகாம் விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்டது.

அதற்கான அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட 45 மில்லியன் ரூபாவினை 46 காணி கட்டட உரிமையாளருக்கு நேற்று காரைநகருக்கு வருகைதந்திருந்த காணி அமைச்சரினால் காசோலை மூலம் தனித்தனியாக கையளிக்கப்பட்டன.

இவ்வைபவம் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் தலைமையில் காரைநகர் தியாகராசா மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றன. (50)

# குள்ள மனிதர்கள் தாக்குதல் மட்டக்களப்பில் சிறுவன் மயக்கம்

மட்டக்களப்பில் அபூர்வமான குள்ள மனிதர்கள் தாக்கியதில் 15 வயது சிறுவன் மயக்கமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

மட்டக்களப்பு பன்குடாவெளியில் வசிக்கும் அசிதாஸ் குகதாஸ் என்ற 15 வயதுடைய சிறுவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை 2.00 மணியளவில் ஆடுகள் மேய்ப்பதற்காக அருகில் உள்ள காட்டுப் பகுதிக்குச் சென்றிருக்கிறார்.

ஆனால் நேற்றுமுன்தினம் மாலை வரை இவர் வீடு திரும்பாததால் இவரின் வீட்டார் மற்றும் கிராமவாசிகள் இவரைத் தேடி இருக்கிறார்கள். ஆனால் அவர் கண்டுபிடிக்கவில்லை இதனால் அருகில் இருந்த கரடியனாறு பொலிஸ் நிலையத்திலும் இவரின் தந்தை தனது மகனைக் காணவில்லை என முறைப்பாடு செய்திருக்கிறார்.

இந்த நிலையில் நேற்று மாலை 5.30 மணியளவில் காணாமல் போன குகதாஸ் அரை மயக்க நிலையில் தனது வீட்டை நோக்கி வந்ததனைக் கண்ட கிராமத்தவர்கள் செங்கலடி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட பின் ஓரளவு மயக்கம் தெளிந்த நிலையில் தனக்கு என்ன நடந்ததென வைத்தியர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

# ஆளுநர் தலைமையில்....

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் மர்ம மனிதன் பிரச்சினை தொடர்பாகவும், அதனைப் போக்கும் வழிவகைகள் குறித்தும் ஆராயுமுகமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தம்மைப் பணித்திருப்பதாகவும், அதன் நிமித்தமே தமது இவ்விஜயம் அமைந்திருப்பதாகவும் பொதுமக்களுக்கு மர்ம மனிதன் தொடர்பாக நடைபெற்றிருக்கும் பாதிப்புக்களை சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் மூலம் அறிந்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தாம் கொழும்பு திரும்பியதும் இவ்விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நிலைமையைத் தெளிவுபடுத்தி மர்ம மனிதன் தொடர்பாக மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில்,

சமீபகாலமாக நடைபெற்று வரும் மக்களின் துன்பியலான சம்பவங்கள் தொடர்பாக அரசு கவனமெடுத்து அதனைப் போக்க நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்தார்.

வதந்திகளுக்கு மக்கள் எடுபடாமலும் வதந்திகளைப் பரப்பாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சிவில் சமூகத்தினரை அமைச்சர் கேட்டுக் கொண்டதுடன், சமூகத்திற்கு ஏற்படும் இவ்வாறான துன்பகரமான சம்பவங்கள் கண்டிக்கப்பட வேண்டும் என்பதில் தமக்கு மாற்றுக்கருத்து இல்லை எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பை ஒழுங்குசெய்து தந்த ஜனாதிபதிக்கு தம் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி நடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலென்ரின், மு.சந்திரகுமார், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹதுருசிங்க, பொலிஸ் மா அதிபர், அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபை செயலாளர்கள், கிராமசேவகர்கள், சிவில் சமூகத்தினர், சர்வமதத் தலைவர்கள் கலந்துகொண்டனர். (பா)

# நாவாந்துறையில்...

கலங்கியபடி விபரித்தார்.

நாவாந்துறையில் உண்மையில் நடந்தது என்ன என்பது குறித்து பக்கச்சார்பற்ற முறையில் பூரண விசாரணை நடத்தப்பட்டு உண்மையைக் கண்டறியவேண்டும் என்றும், இச்சம்பவத்துக்கு படைத்தரப்பு பொறுப்பேற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதுடன், கைது செய்யப்பட்ட எமது கிராம மக்கள் அனைவரும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என் றும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

மேற்படி நாவாந்துறை சம்பவத்தினால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டது அப்பகுதி பெண்கள் தான் என்றும், இன்னமும் அக்கிராமம் பீதியின் பிடியிலிருந்து முழுமையாக மீள முடியாமல் உள்ளது. இரவுப் பொழுதில் அப்பகுதி மக்கள் வேறு இடங்களுக்குச் சென்று தங்கும் நிலைமை தொடர்வதாகவும் யாழ். பெண்கள் அமைப்பின் தலைவர் சரோஜா சிவச்சந்திரன் அக்கூட்டத்தில் தெரிவித்தார்.

# மிகுதி ஒன்பது...

ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி நீதிமன்றத்தில் குறித்த 9 பேரையும் ஆஜராகும்படி உத்தரவிட்டார். இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்பட்ட 91 பேர் ஏற்கனவே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மிகுதி 9 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். (எஸ்)


# இரகசிய வலையமைப்பு...

தகவல் பரிமாற்றத்திற்காக பிரத்தியேகமான குரல் மற்றும் தரவு வலையமைப்பொன்றை இலங்கை இராணுவம் முதல் முறையாக ஸ்தாபித்துள்ளது. இராணுவத்தின் 30 இற்கும் மேற்பட்ட பிரிவுகளின் தலைமையகங்கள், கிளைகள், 6 பாதுகாப்புப் படையணிகளின் தலைமையகங்கள், 14 படைப்பிரிவுகள் மற்றும்22 பிராந்திய தலைமையகங்கள் ஆகியவற்றை இணைக்கும் விதமாக இவ்வலையமைப்பு அமைந்துள்ளது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய, இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இவ்வலையமைப்பை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இலங்கையின் மிகவும் பாதுகாப்பான வலையமைப்புகளில் ஒன்றாக இதை பேணுவதற்காக அதி நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செய்திப்பாணம்

**நோய்களின் களஞ்சியம் நம்மவர் உடல்கள்**
**பாய்தனில் வீழ்ந்தால் பார்ப்பவர் - தாய்போல்**
**புற்றுநோய், நீரழிவு, புரதக்கொழுப் பென்றிபுகல்**
**அற்பசொற்ப நோய்களுமே ஆயுள்!**



# காரைநகர் தோப்புக் காட்டில் வாழ்வாதார உதவித் திட்டம்


## யு.என்.டி.பி. அனுசரணை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட தோப்புக்காடு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் தொழில் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 08ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் தோப்புக்காடு முருகன் கோவில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவாந்தா கலந்துகொள்வதுடன், காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (69)

# சீமான் கைது



(சென்னை)

நாம் தமிழர் அமைப்பின் தலைவர் சீமான் உள்ளிட்ட 230 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராஜிவ் காந்தி கொலை தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளர்களின் தண்டனையைக் குறைக்குமாறு வலியுறுத்தி இடம்பெற்ற நடைபயணதின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.சீமான் தலைமையில் நாம் தமிழர் அமைப்பினர் வேலூரில் இருந்து சென்னைக்கு நடைபயணம் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கான அனுமதியினை பொலிஸார் வழங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

எனினும், நடைபயணத்தின் போது பொலிஸார் விதித்த நிபந்தனைகளை மீறினார்கள் எனக் கூறி, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.முஸ்லிம் பகுதியில் மீன் எழுச்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையில் கிராம மீன் எழுச்சித் திட்டம் ஒன்று யாழ்பிரதேச செயலர் திருமதி.சு. தெய்வேந்திரம் தலைமையில் கிராம அலுவலர் பிரிவுகளான ஜே/86, ஜே/87 ஆகிய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வுக்கு மேற்படி பிரிவுகளைச் சேர்ந்த அநேக மக்கள் கலந்துகொண்டு தங்களது கிராம அபிவிருத்தி தொடர்பாக எடுத்துக் கூறினர்.

இதன்பிரகாரம் இத்திட்டத்தை செயற்படுத்த அபிவிருத்தி குழு ஒன்று அமைக்கப்பட்டு இக்குழு மூலமாக இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், கலந்துகொண்ட பிரதேச செயலக அதிகாரிகள், வடிகால் அபிவிருத்தி, வீடமைப்பு, காணி துப்புரவு, வீதிப் புனரமைப்பு, சுயதொழில் வாய்ப்பு, மின்சார விநியோகம், சுகாதாரம், கல்வி போன்ற விட யங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக எடுத்துக் கூறினர். (105)

## ஆட்டோ விபத்தில் இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோ கவிழ்ந்ததில் இளைஞர் படுகாயம் அடைந்துள்ளார். நேற்று மதியம் 3.30 மணியளவில் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த க.தர்ஷன் (வயது-25) என்ற இளைஞரே படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# இரவு நேரக் கண்காணிப்பு வலி.கிழக்கில் தீவிரம்

(நீர்வேலி)

வலி.கிழக்கில் மர்ம மனிதனின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து இரவில் தமது ரோந்து நடவடிக்கையை அதிகரித்துள்ளனர்.

முக்கிய வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் போன்றவற்றில் இரவில் இராணுவத்தினர் தமது ரோந்தை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவோரை வழிமறித்து இராணுவத்தினர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இராணுவத்தினரின் இரவு ரோந்து நடவடிக்கையினால் சந்திகள் மற்றும் பொது இடங்களில் கூடி நின்று பொழுது போக்குபவர்களின் எண்ணிக்கையும் தற்போது குறைந்து காணப்படுகின்றன. (வி)

## கனரக வாகனம் மரத்துடன் மோதியது

உரும்பிராய் ஞானவைரவர் கோவிலின் அருகே வாகனம் மரத்துடன் மோதியதில் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அளவுக்கு அதிகமாக மண் ஏற்றி வந்த டிப்பர் வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

வீதியின் அகலிப்பு வேலைகளில் ஈடுபட்டு வந்த வாகனமே அளவுக்கதிகமான மணலை ஏற்றி வந்ததுடன், அதிவேகத்துடன் வந்ததன் காரணமாகவே இவ் விபத்து ஏற்பட்டதாக இப்பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. (எப்.எஸ்)

# மூவரையும் தூக்கிலிடுங்கள் சென்னையில் மறியல் போர்

## 300 பேர் பொலிஸாரால் கைது

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண் டனை பெற்ற 3 பேரையும் உடனே தூக்கிலிடக் கோரி சென்னை கடற்கரை சாலையில் உள்ள டி.ஜி.பி. அலுவலகம் முன்பு நேற்றுக் காங்கிரசார் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதன்போது 300க்கும் அதிகமானோரை பொலிஸார் கைது செய்தனர். தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர் யுவராஜ் தலைமையில் நடந்த மறியல் போராட்டத்தில்,மாஜி எம்.எல்.ஏ.க்கள் அருள் அன்பரசு, விடியல் சேகர், வேணுகோபால், ஜீனத் சர்புதீன், மாவட்டத் தலைவர்கள் ராயபுரம் மனோ, கோவிந்தசாமி, சென்னை மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் சைதை ரவி, அரக்கோணம் நாடாளுமன்ற இளைஞர் காங். தலைவர் நாசே ராஜேஷ், சதீஷ், பிஜு சாக்கோ உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரை உடனே தூக்கிலிட வேண்டும் அவர்களுக்கு ஆதரவாக செயல்படும் வைகோ, சீமான், திருமாவளவனை கைது செய்யவேண்டும் ம.தி.மு.க, நாம் தமிழர் கட்சியை தடை செய்ய வேண்டும் என்று காங்கிரசார் கோஷமிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பொலிஸாரினால் 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

# அகதி முகாம்களுக்கு மூடுவிழா இடம்பெயர்ந்த மக்களுக்கு விடிவு

(கொழும்பு)

இறுதி யுத்தத்தில் இடம் பெயர்ந்த மக்கள் தங்க வைக் கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்கள் அனைத்தும், இந்த வருட இறுதிக்குள் மூடப்படும் என பாதுபாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த இடம் பெயர்ந்த மக்களுள், 95 சத வீதமானவர்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எஞ்சியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் இந்த வருட இறுதிக்குள் மீள குடியேற்றம் செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அடைக்கல நாயகி வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி நாளை காலை 6.30 மணிக்கு அருட்பணி அன்ரன் மத்தியாஸ் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, அன்னையின் திருச்சொரூபமானது கிராமத்தைச் சுற்றி வலம் வந்து இறுதியில் அன்னையின் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும்

கடந்த எட்டு நாட்களும் அருட் தந்தை ஜோஜ் பெனாண்டோ (அ.ம.தி) அடிகளாரின் ஆன்மீகச் சிறப்பு மறையுரைகளுடன் ஆயத்த வழிபாடுகள் நடைபெற்றது. நவநாட்களின் இறுதி நாளாகிய இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள நற்கருணைப் பெருவிழாவில் "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்னும் கருப்பொருளில் சிறப்பு வழிபாடும், நற்கருணை பவனியும் இடம்பெறவுள்ளது.


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Chundikuli, Jaffna.
Phone : 021.2228093 E-mail : alliancejaffna@yahoo.com

**புகைப்படக் கண்காட்சியும் புகைப்படப் போட்டியும்.**

**புகைப்படக் கண்காட்சி**

**நீர், குடங்கள், பெண்கள்**

இலங்கைக்கான பிரெஞ்சுத் தூதுவர், மேதகு திருமதி கிறிஸ்தீன் றொபிஷோன் அவர்கள் எடுத்த புகைப்படங்கள்.

காலம் : September 7 ஆம் திகதி புதன் முதல் September 14ஆம் திகதி புதன் வரை (சனி, ஞாயிறு உட்பட)
நேரம் : காலை 9.00 - மாலை 7.00
இடம் : Alliance francaise de jaffna (61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்)

**புகைப்படப் போட்டி**

நீங்களே சுயமாக எடுத்த புகைப்படமொன்றினை அனுப்பிப் போட்டியில் கலந்துகொள்ளுங்கள்.
புகைப்படப் போட்டிக்கான முடிவு திகதி 14 September 2011.
தொனிப்பொருள் : **நீர், குடங்கள், பெண்கள்**
படம் கறுப்பு-வெள்ளை ஆகவோ வண்ணமாகவோ இருக்கலாம்.
பரிசுகள் : முதல் மூன்று பரிசுகளுக்கும் வங்கி ஒன்றின் நிலையான வைப்புச் சான்றிதழும் (FD) பாராட்டுச் சான்றிதழும்.
1ஆம் பரிசு: Rs.15,000 - 2ஆம் பரிசு: Rs. 10,000 - 3ஆம் பரிசு: Rs. 5,000. தெரிவு செய்யப்படும் மேலும் 9 போட்டியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
இப்பன்னிரண்டு புகைப்படங்களும் பின்னர் இதே தொனிப்பொருளில் நடத்தப்படும் இரண்டாவது புகைப்படக் காட்சியில் உள்ளடக்கப்படும். போட்டிக்கான பதிவுப் படிவம் மற்றும் விதிகள் முதலியவற்றைக் கண்காட்சி நடைபெறும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம். (R/046)


# கஞ்சா வைத்திருந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

கிளிநொச்சிப் பகுதியில் 3 கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த நபர் ஒருவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தினால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த குற்றச் செயலுக்காக கிளிநொச்சி பொலிஸார் குறித்த நபரை கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி கே.சிவகுமார் குறித்த குற்றத்துக்காக 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் செலுத்தத் தவறின் 2 மாத சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

இதேவேளை, குறித்த நபர் வேறொரு குற்றத்துக்காக ஏற்கனவே நீதிமன்றத்தினால் தண்டனைக்குட்படுத்தப்பட்டமையால் அதற்காக 6 மாத கடூழிய சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.(கே)

# முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராக கல்முனையில் உண்ணாவிரதப்போர்

(கல்முனை)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவத்திற்கு எதிராக கல்முனை இஸ்லாமாபாத் பிரதேசத்தில் அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகியுள்ளது.

கல்முனை மாநகரசபை தேர்தலில் இஸ்லாமாபாத் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் போட்டியிடுவது வழமையாகும் ஆனால், எதிர்வரும் ஒக்டோபர் 8ஆம் திகதி நடைபெறவுள்ள கல்முனை மாநகரசபை தேர்தலில் இஸ்லாமாபாத் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரேனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை எனவும் கூறி இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறுகின்றது.

மாநகரசபையின் கடந்த ஆட்சியின் போது இஸ்லாமாபாத் பிரதேசத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஜமால் என்று அழைக்கப்படும் பி.ரீ.உதுமாலெவ்வை பிரதிநிதித்துவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பெண்கள் உட்பட பலர் கலந்துகொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்துக்கு எதிராக பல கோஷங்களை எழுப்பினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.